Registered as a Newspaper

பக்கங்கள் 12

விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 38
கதிர் : 185

செவ்வாய்க்கிழமை 30 மே 2023

வைகாசி 16 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

## வடக்கில் வீதி விபத்துக்களால் 16 பேர் 'மே'யில் சாவு!

யாழ்ப்பாணம், மே 30

வடக்கு மாகாணத்தில் இந்த மாதத்தின் முதல் 29 நாள்களில் மாத்திரம் வீதி விபத்துக்களால் 16 பேர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர். இதில் யாழ். மாவட்டத்தில் மாத்திரம் 10 பேர் உயிரிழந்துள்ளமை தரவுகளிலிருந்து தெரியவருகின்றது. »11

## 'பட்டா' ரக வாகனம் மோதி தருமபுரத்தில் ஒருவர் பலி!



கிளிநொச்சி, மே 30

கண்டாவளை, வெலிக்கண்டல் சந்தியில் 'பட்டா 'ரக வாகனமும் மோட்டார் சைக்கிளும் மோதியதில் காயமடைந்த இளம் குடும்பத் தலைவர் ஒருவர் மருத்துவமனையில் »11

## நேர்முகத்தேர்வுக்கு சென்றவர் வீதி விபத்தில் சிக்கி சாவு!

வெள்ளைக்கோட்டில் முந்திச்செல்ல முயன்ற லொறிக்குள் அகப்பட்டதால் விபரீதம்



யாழ்ப்பாணம், மே 30

கே.கே.எஸ். வீதியில் முட்டாஸ் கடைச் சந்திக்கு அருகில் நேற்று திங்கட்கிழமை மதியம் இடம்பெற்ற லொறி - மோட்டார் சைக்கிள் விபத்தில், »11

## வீதியைக் கடக்க முற்பட்டவர் வாகனம் மோதியதில் உயிரிழப்பு

தெல்லிப்பழையில் சம்பவம்

யாழ்ப்பாணம், மே 30

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்துக்கு முன்பாக நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மதியம் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். »11

அதிகரிக்கும் வீதி விபத்துக்கள்:

## ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் நாளை மீண்டும் ஆராயப்படும்

மாவட்டச் செயலர் தகவல்

யாழ்ப்பாணம், மே 30

யாழ். மாவட்டத்தில் அதிகரித்துச் செல்லும் வீதி விபத்துக்கள் தொடர்பில் யாழ். மாவட்டச் »11

முன்னாள் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானின் நினைவாக ஜனாதிபதி ரணில் தலைமையில் விசேட நினைவு முத்திரையும் முதல் நாள் கடித உறையும் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று வெளியிடப்பட்டது. இந்த நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவுடன், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் உரையாடுவதைக் காணலாம். (அ-ஒ,இ)



விடுதியில் சமூகச் சீரழிவு

## கொழும்பைச் சேர்ந்த இரு பெண்கள் கைது

யாழ்ப்பாணம், மே 30

சுண்டுக்குளியிலுள்ள தனியார் விடுதி ஒன்றில் சமூகச் சீரழிவுகள் இடம்பெறுவதாக »11

## மாணவர்களின் வசதிக்கே முன்னுரிமை கொடுக்கவும்!

பரீட்சைத் திணைக்களத்துக்கு ரணில் 'டோஸ்'

கொழும்பு, மே 30

தாம் கல்வி கற்ற அன்றாட சூழலுக்கு மாற்றமான - பரிச்சயமற்ற சூழலில் பரீட்சைக்கு முகம் கொடுப்பது மாணவர்களின் மன அமைதிக்குத் தடையாக இருப்பதாகவும், எப்போதும் கல்வி அமைச்சும் பரீட்சைத் திணைக்களமும் »11

## வாக்காளர் பதிவு நாளை இறுதிநாள்

கிராம அலுவலர்கள் வீடு தேடி வராவிடின் உடன் தொடர்புகொண்டு பதிவு செய்யுங்கள்

யாழ்ப்பாணம், மே 30

2023ஆம் ஆண்டுக்கான வாக்காளர் கணக்கெடுப்பின் இறுதித் திகதி நாளை 31ஆம் திகதி என தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. இந்தக்காலப்பகுதிக்குள் கிராம அலுவலர்கள் கணக்கெடுப்பை மேற்கொள்வதற்கு வீடுகளுக்கு வருகை தராவிடில் வாக்காளர்கள் உடனடியாகத் தங்கள் பகுதிக்குரிய கிராம »11

## மத நல்லிணக்கத்தை சீர்குலைப்போரை கைது செய்ய விசேட பொலிஸ் பிரிவு

ஜனாதிபதி ரணில் அவசர நடவடிக்கை

கொழும்பு, மே 30

நாட்டில் தொடர்ச்சியாக பௌத்த மதத்தை நிந்திக்கும் செயற்பாடுகள் இடம்பெற்று வருவதாகக் கருதும் ஆட்சியாளர்கள், மத நல்லிணக்கத்தை சீர்குலைப்பதற்கான திட்டமிட்ட நடவடிக்கை இடம்பெற்று வருவதாகச் சந்தேகிக்கின்றனர். »11






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதசுதந்திரத்துக்குப் பாதகம்; புது சட்டவரைவு விரைவில்!

## அமைச்சர் விதுர தெரிவிப்பு



**கொழும்பு, மே 30**

**மதச் சுதந்திரம் மற்றும் மத சுதந்திரத்தைப் பாதுகாப்பது தொடர்பில் புதிய சட்டத்தைக் கொண்டுவருவதற்கான சட்டவரைவு தயாரிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என புத்தசாசன மற்றும் மத விவகாரங்கள் அமைச்சர் விதுர விக்ரமநாயக்க தெரிவித்துள்ளார்.**

அத்துடன் மதங்களை இழிவுபடுத்தும் கருத்துக்களை வெளியிடுவர்கள் தொடர்பாக விசாரணைகள் இடம்பெறுகின்றன எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்;

நாட்டில் அண்மைக்காலமாக சமய நல்லிணக்கம் மற்றும் மதச்சுதந்திரத்தைச் சீர்குலைக்கும் வகையில் பலர் நடந்துகொள்கின்றனர். அண்மையில் பௌத்த மதத்தை அவமதிக்கும் வகையில் கருத்து வெளியிட்ட நதாஷா எதிரிசூரிய மற்றும் சத்தானந்த தேரர் உள்ளிட்டோரை குற்றப்புலனாய்வுப் பிரிவினர் கைதுசெய்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அண்மையில் போதகர் ஜெரோம் பெர்னாண்டோ மதங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் வகையிலான கருத்துக்களைத் தெரிவித்ததாக சர்ச்சை எழுந்துள்ளது. புத்தசாசன அமைச்சு இவ்வாறான சம்பவங்கள் தொடர்பாக எந்நேரமும் விழிப்புடனே இருக்கிறது. மத நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் வகையில் கருத்துக்களைத் தெரிவிப்போருக்கு எதிராகப் புதிய சட்டம் ஒன்று எதிர்வரும் காலத்தில் நாடாளுமன்றத்தில் கொண்டுவந்து நிறைவேற்றப்படும் - என்றார். (ச-இ)



# அடாவடிக் கும்பலால் வீடு அடித்துடைப்பு!

வவுனியா, மே 30

வவுனியா மரக்காரம்பளை பகுதியில் வீடொன்றுக்குள் அத்துமீறி நுழைந்த கும்பல் அந்த வீட்டை அடித்துச் சேதப்படுத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளது. வீட்டின் உரிமையாளர்கள் யாரும் இல்லாத சந்தர்ப்பத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றதுடன், இது தொடர்பில் பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது. சி.சி.ரி.வி. கமராப் பதிவுகளின் உதவியுடன் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-110)

# உள்ளூராட்சித் தேர்தலை வலியுறுத்திப் போராட்டம்!

## ஜே.வி.பி. அறிவிப்பு

கொழும்பு, மே 30

உள்ளூராட்சித் தேர்தலை நடத்த வலியுறுத்தி எதிர்வரும் ஜூன் மாதம் மக்கள் போராட்டம் நடத்தப்படும் என ஜே.வி.பி. அறிவித்துள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் தாமதமாகி ஜூன் 9 ஆம் திகதி மூன்று மாதங்கள் நிறைவடைவதை முன்னிட்டும், தேர்தலைக் கோரியும் இந்தப் போராட்டம் நடத்தப்படும் என்று ஜே.வி.பி.யின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.


கம்பஹா, அம்பாந்தோட்டை மற்றும் அநுராதபுரம் ஆகிய இடங்களிலும் அதன் தொடர்ச்சியாகக் கொழும்பிலும் இந்தப் போராட்டங்கள் இடம்பெறும் என்றும் அநுர மேலும் தெரிவித்துள்ளார். (ம)



க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை நாடளாவிய ரீதியில் நேற்று ஆரம்பமானது. இம்முறை க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கு நாடளாவிய ரீதியில் 4 லட்சத்து 72 ஆயிரத்து 553 பேர் தோற்றுகின்றனர்.

இவர்களில் 3 லட்சத்து 94 ஆயிரத்து 450 பாடசாலை பரீட்சார்த்திகளும், 78 ஆயிரத்து 103 தனியார் பரீட்சார்த்திகளும் உள்ளடங்குகின்றனர். (ரி-110)

# இலத்திரனியல் பொருள்களின் விலைகள் விரைவில் தளரும்!



கொழும்பு, மே 30

அலைபேசிகள், குளிர்சாதனப்பெட்டிகள், மின்விசிறிகள் உள்ளிட்ட பல்வேறு இலத்திரனியல் சாதனங்களின் விலைகள் எதிர்காலத்தில் குறைவடையும் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

843 பொருள்களை இறக்குமதி செய்வதற்கான கட்டுப்பாட்டை இலங்கை மத்திய வங்கி தளர்த்தியுள்ளது. இந்தத் தீர்மானத்தால் எதிர்காலத்தில் அலைபேசிகள், குளிர்சாதனப் பெட்டிகள், மின் விசிறிகள், பழங்கள் உள்ளிட்ட பல அத்தியாவசியப் பொருள்களினதும் உணவுப் பண்டங்களினதும் விலை குறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ச-இ)

# ஜெரோம் கைது விவகாரம்; இன்டர்போலை நாடவில்லை

## சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவிப்பு

கொழும்பு, மே 30

சர்ச்சைக்குரிய கருத்தை வெளியிட்ட போதகர் ஜெரோம் பெர்னாண்டோவை கைதுசெய்வதற்கு இன்டர்போல் பிடியாணை பிறப்பிக்கப்படவில்லை. இன்டர்போல் பிடியாணை பிறப்பிக்கப்பட்டதாக வெளியாகிய தகவல்கள் பொய்யானவை என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

போதகர் ஜெரோம் பெர்னாண்டோ இதுவரை இலங்கைக்கு வரவில்லை. சமூக வலைத்தளங்களில் பரப்பப்படுவதைப் போன்று அவருக்கு எதிராக சர்வதேச பிடியாணை எதுவும் பிறப்பிக்கப்படவில்லை. ஜெரோம் பெர்னாண்டோவை இலங்கைக்கு அழைத்து வருவதற்கு இன்டர்போலின் உதவியைக் கோருவது தொடர்பில் இதுவரை சட்ட ஆலோசனைகள் கிடைக்கப்பெறவில்லை. ஜெரோம் பெர்னாண்டோவுக்கு எதிராக சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் சாசனச் சட்டம் மற்றும் தண்டனைச் சட்டத்தின் கீழ் கோட்டை நீதிவான் நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்யப்படவுள்ளது - என்றார். (ச-இ)

# ம.உ. ஆணைக்குழுவில் நெருக்கடிநிலை மோசம்!

கொழும்பு, மே 30

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவருக்கும் அதன் உறுப்பினர்களுக்கும் இடையிலான நெருக்கடி நிலை மேலும் மோசமடைந்துள்ளது.

கடந்த காலங்களில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களை கலந்தாலோசிக்காமல், ஆணைக்குழுவின் தலைவர் தீர்மானங்களை மேற்கொண்டமையே இந்தப் பிரச்சினைகள் ஏற்படுவதற்கான காரணம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள், தமது அதிருப்தியை பல தடவைகள் தலைவருக்குத் தெரியப்படுத்திய போதிலும் அவர் இது தொடர்பில் பொருட்படுத்தவில்லை என அதன் உறுப்பினர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். (ம-இ)

# முள்ளிவாய்க்கால் படுகொலை மனு அமெ. வாழ் சிங்களவர்கள் எதிர்ப்பு

கொழும்பு, மே 30

மே மாதம் 18 ஆம் திகதியன்று, முள்ளிவாய்க்கால் படுகொலை நாளை முன்னிட்டு அமெரிக்க காங்கிரஸின் பெண் எம்.பிக்கள் நால்வர், 'இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலை' தொடர்பான தீர்மானமொன்றை அமெரிக்க வெளிவிவகார அமைச்சிடம் கையளித்துள்ள நிலையில், இதற்கு அமெரிக்க வாழ் சிங்களவர்கள் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர்.

வொஷிங்டனில் உள்ள இலங்கைத் தூதரகம் சரியான வகையில் தொடர்பாடல்களைப் பேணவில்லை. அமெரிக்க காங்கிரஸ் பெண் உறுப்பினர்களின் அலுவலகத்துக்கு அருகேதான் அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதரகம் அமைந்துள்ளது. அப்படியிருந்தும் இலங்கைத் தூதரகம் முறையான தொடர்பாடல்களைப் பேணத் தவறியுள்ளது - என்று அமெரிக்க வாழ் சிங்களவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (ம-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ரூபா வலுவடைவு

# இறக்குமதிப் பொருள்களின் விலையைக் குறைக்க ஆராய்வு!

**கொழும்பு, மே 30**

**இலங்கை ரூபாவின் பெறுமதி வலுவடைந்தமையைத் தொடர்ந்து, அதற்கு இணையாக இறக்குமதி செய்யப்படும் பொருள்களின் விலையில் உரிய வகையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றதா? என்பது ஆராய்ந்து பார்க்கப்படும் என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.**



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

டொலர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காகவும், அந்நியச் செலாவணியை (சர்வதேச நாணயக் கையிருப்பு) சீராகப் பேணுவதற்காகவும் இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்குக் கட்டுப்பாடுகளை விதிக்க அரசாங்கம் பல்வேறு சந்தர்ப்பங்களில் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது.

விவசாயம், கடற்றொழில் மற்றும் கைத்தொழில் உள்ளிட்ட பல்வேறு துறையினரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய தற்போது சில பொருள்களை இறக்குமதி செய்வதற்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளன. பொருளாதாரம் முன்னேற்றப்பாதையை நோக்கி நகர்வதால் அந்நியச் செலாவணிக் கையிருப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படாத வகையில் மேலும் சில இறக்குமதிப் பொருள்களுக்கான கட்டுப்பாடுகளைத் தளர்த்துவதற்கு அவதானம் செலுத்தப்படும் - என்றார். (ம)

## அலி சப்ரிக்கு எதிராக நீதிமன்றை நாடுங்கள்!

கொழும்பு, மே 30

புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமின் சட்டவிரோத செயற்பாடுகளுக்கு எதிராக நாடாளுமன்றத்தால் நடவடிக்கை எடுக்க முடியாததால், சம்பந்தப்பட்ட தரப்பினர் நீதிமன்றில் வழக்குத் தொடர வேண்டுமென சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம், தங்கம் மற்றும் தொடுதிரை அலைபேசிகளைக் கடத்தி வந்த குற்றச்சாட்டில் சுங்க அதிகாரிகளால் அண்மையில் கைதுசெய்யப்பட்டார். அவர் 7 கோடி ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டார். அவருக்கு எதிராக நாடாளுமன்றம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வலியுறுத்தினார்கள். இந்த நிலையிலேயே, புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமின் சட்டவிரோத செயற்பாடுகளுக்கு எதிராக நாடாளுமன்றத்தால் நடவடிக்கை எடுக்க முடியாததால், சம்பந்தப்பட்ட தரப்பினர் நீதிமன்றில் வழக்குத் தொடர வேண்டுமென சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார். (ம-இ)

## சத்தா ரத்ன தேரர் பொலிஸாரால் கைது

கொழும்பு, மே 30

மத நல்லிணக்கத்தைச் சீர்குலைக்கும் வகையில் கருத்துக்களை வெளியிட்ட குற்றச்சாட்டின் கீழ் ராஜாங்கனை சத்தா ரத்ன தேரர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார். அநுராதபுரம் பகுதியில் வைத்து அவர் கைது செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

சமூக வலைத்தளங்களில் ஆபாசமான வார்த்தைகளைப் பதிவிட்டு, மத நல்லிணக்கத்துக்குக் குந்தகம் விளைவித்தமைக்காக ராஜாங்கனை சத்தா ரத்ன தேரரை பொலிஸார் கைதுசெய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டு வந்த நிலையில், தற்போது அவர் கைதுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## சந்தையில் சமூகச்சீரழிவு!

செங்குந்தா பொதுச்சந்தை வளாகத்தில், சுகாதாரச் சீர்கேடான விடயங்கள் பல இடம்பெறுகின்றன என்றும், அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சந்தையின் படிக்கட்டுகளில் இருந்து மது அருந்துதல், புகைத்தல் மற்றும் சிறுநீர் கழித்தல் போன்ற ஒழுக்கக்கேடான நடவடிக்கையில் பலரும் ஈடுபடுகின்றனர். எனவே, சந்தைப் பகுதியின் தூய்மையைப் பேணுவதற்கும், சமூகவிரோதச் செயல்களில் ஈடுபடுவோரைக் கைது செய்வதற்கும் அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் பொதுமக்கள் வலியுறுத்தியுள்ளனர். (ம-ரி)

### *வரி அதிகரிப்பு எதிரொலி*

# நாட்டில் அதிகரிக்கின்றது சட்டவிரோத மதுஉற்பத்தி

நாட்டில் சட்டவிரோத மது உற்பத்தி அதிகரித்து வருவதால் மதுபான விற்பனை வீழ்ச்சி கண்டுள்ளது என மதுபான உரிமம் வைத்திருப்போர் சங்கம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் அந்தச் சங்கத்தின் தலைவர் டலஸ் பெர்னாண்டோ தெரிவிக்கையில், நாட்டில் மதுபான விற்பனை பெருமளவில் குறைந்துள்ளது. வரி உயர்வைத் தொடர்ந்து உள்ளூர் மதுபானக் கொள்வனவிலிருந்து மக்கள் விலகி அண்மைக்காலமாக சட்டவிரோத மது உற்பத்திகளை நாடுகின்றனர். இந்தச் சட்டவிரோத மது உற்பத்திக்கு மூலப்பொருள்களாக காட்டு யானைகளை அடக்[illegible] பயன்படுத்தப்படும் [illegible] குலைசர்கள் உட்பட ஆபத்தான பல இரசாயனங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

மதுபான வரிகள் குறைக்கப்பட்டால், அரசாங்கம் தமது வருமானத்தை, தற்போதைய 170 பில்லியன் ரூபாவிலிருந்து 300 பில்லியன் ரூபாவாக அதிகரிக்க முடியும். அத்துடன் [illegible] களையும் [illegible] முடியும் - என்றார். (ச-இ)




எல்லாற்றை கண்டும் ஓடிச்செண்டு கந்தையரின்ர பேத்தைக் கண்டும் சவாரி ஓடினமாதிரி, முல்லைத்தீவில ஒரு பிரதேசசபை கலியாண மண்டபம் கட்டுற கதையிருக்குது. அந்தப் பிரதேசசபை, ஒரு கடைத்தொகுதியைக் கட்டி அங்கத்தை வர்த்தகர்மாருக்கு 99 வருசக் குத்தகைக்கு 2016 இல குடுத்திருக்கு. அதுவும் முறையா கேள்விப்பத்திரம் எல்லாம் போட்டுத்தான் இந்தக் கடையள் குடுபட்டது. குத்தகைக்கு எடுத்தவையும் ஒழுங்கா வாடகை, கறண்ட் காசு எல்லாம் கட்டிக்கொண்டு வருகினம். இத்தனைக்கும் அந்தக் கடைத்தொகுதி இருக்கிற இடத்தில அவ்வளவா பிஸ்னஸ் நடக்கிறேலை. அதால அந்தக் கடைத்தொகுதியில் இருக்கிற கடையளில தொண்ணூறு சதவீதமான கடையள் இன்னும் திறபடேலை. இருந்தாலும் அவையும் வாடகை கட்டிக்கொண்டுதான் வருகினம். எப்பவாவது அந்த இடம் சனப்புழக்கம் கூடின இடமா மாறினால், விட்டதைப் பிடிக்கலாம் எண்ட நம்பிக்கையிலதான் அவை இப்பிடி திறக்காத கடைக்கும் வாடகை கட்டுகினம்.

இந்தக் கடைத்தொகுதியின்ர மேல் பக்கத்தில லைபிரரியும், ஒரு பொதுமண்டபமும் இருக்கு. அந்தப் பொதுமண்டபத்தில நிகழ்ச்சி ஏதும் நடந்தால், அதாலையும் ஒரு வருமானம் இடைக்கிடை கிடைக்கும். இப்பிடிப்பட்ட நிலைமையில அந்தக் கடைத்தொகுதியில உள்ள மேல்மாடியை இடிச்சிட்டு, அந்த இடத்தில ஒரு கலியாண மண்டபத்தைக் கட்டுறதுக்கு பிரதேசசபை முடிவெடுத்து செயலிலையும் இறங்கியிருக்காம். ஏற்கனவே கேள்விப்பத்திரம் கோரி, அதின் படி விண்ணப்பிச்சு, குத்தகைக் காசு கட்டி, மாச வாடகை கட்டி, கறண்ட் காசு கட்டி அந்தக்கடை 99 வருசமும் தங்களுக்குத்தான் எண்டு நம்பிக்கொண்டிருந்த கடைக்காரருக்கு, இந்தக் கலியாண மண்டபம் கட்டுற விசயத்தால தலையில இடி விழாத குறைதான். அவை இனி எங்க போவினம்? இப்பிடி இடிச்ச கடையளுக்குப் பதிலா புதுக்கடையளை பிரதேசசபை குடுக்குமோ? குத்தகை எண்டது ரண்டு தரப்பு போடுற ஒப்பந்தம் தானே. அதில ஒரு தரப்பின்ர சம்மதம் இல்லாமல், பிரதேசசபை கலியாண மண்டபம் கட்டுறது சட்டத்தை மீறுற செயலெல்லோ?

அதோட, முல்லைத்தீவில ஏற்கனவே ஒண்டிரண்டு கலியாண மண்டபங்கள் இருந்தும், அதுகளே நிகழ்வுகள் நடக்காமல் ஈயோட்டிக் கொண்டிருக்கேக்க, தங்கட வருமானத்தை அதிகரிக்கிறதாச் சொல்லி, இருக்கிற கடையளை இடிச்சிட்டு, சனத்தின்ர காசைக் கரியாக்கி, கலியாண மண்டபம் தான் கட்டுவம் எண்டு ஒற்றைக்காலில நிற்கிற பிரதேசசபைக்காரரின்ர மூளையை என்னெண்டு சொல்லுறது? சரி, கலியாண மண்டபம் கட்டித்தான் காசு கனக்க உழைக்கலாமெண்டா முதலே உந்தக் கடையளைக் கட்டாமல், குத்தகைக்கு குடுக்காமல் கலியாண மண்டபத்தைக் கட்டியிருக்கலாமே? இப்பிடி ஆயிரம் கேள்வியள் கேக்கலாம். ஆனால் அதுக்கு பிரதேசசபை பதில் சொல்ல வேணுமே?



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிகவும் துயரமான நாடுகள்: இலங்கைக்கு 11ஆவது இடம்

கொழும்பு, மே 30

**2022ஆம் ஆண்டில் உலகின் துயரமான நாடுகளின் பட்டியலில் இலங்கை 11ஆவது இடத்திலும், இந்தியா 103ஆவது இடத்திலும் உள்ளன.**

பொருளாதார நிபுணர் ஸ்டீவ் ஹன்கே வெளியிட்ட தரப்பட்டியலில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. 157 நாடுகளில் நிலவும் வேலையின்மை, பணவீக்கம், வங்கிக் கடன் ஆகியவற்றின் அடிப்படையில் இந்தப் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. இந்தப் பட்டியலில் முதல் 15 இடங்களில் சிம்பாப்வே, வெனிசுலா, சிரியா, லெபனான், சூடான், ஆர்ஜென்டினா, யேமன், உக்ரைன், கியூபா, துருக்கி, இலங்கை, ஹைட்டி, அங்கோலா, டோங்கா, கானா ஆகிய நாடுகள் உள்ளன. உலகின் மிகவும் மகிழ்ச்சியான நாடான பின்லாந்து, உலகின் மிகவும் துயரமான நாடுகளின் பட்டியலில் 109ஆவது இத்தில் உள்ளது. இதற்கு அங்கு நிலவும் வேலையின்மை மிகவும் முக்கியமான காரணியாக உள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-இ)

# இன்றைய நாள் (ராசிபலன்)



**மேடம்:** வரவும் செலவும் அடுத்தடுத்து வந்தாலும் சமாளித்துவிடுவீர்கள். மகிழும் வாய்ப்பு உண்டாகும். நண்பர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள். எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு.

**இடபம்:** தேவையான பணம் கையில் இருப்பதால் உற்சாகத்துடன் காணப்படுவீர்கள். பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும். குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும்.

**மிதுனம்:** எதிர்பார்த்த பணம் கிடைப்பதால், செலவுகளைச் சமாளிப்பதில் சிரமம் எதுவும் இருக்காது. சிலருக்கு தாய்வழி உறவுகளால் ஆதாயம் உண்டாகும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள்.

**கடகம்:** எதிர்பாராத செலவுகள் அதிகரித்தாலும் சமாளிக்கத் தேவையான பணம் கிடைத்துவிடும். உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்காக செலவு செய்ய வேண்டி வரும். உற்சாகம் ஏற்படும்.

**சிம்மம்:** காரியங்கள் அனுகூலமாகும். செலவுகள் ஏற்பட்டாலும், அதனால் மகிழ்ச்சியே உண்டாகும். உறவினர்களால் வீட்டில் சிறுசிறு பிரச்சினைகள் ஏற்படக் கூடும்.

**கன்னி:** சோர்வு நீங்கி உற்சாகத்துடன் செயற்படுவீர்கள். பிள்ளைகள் பிடிவாதம் பிடித்தாலும், அவர்களை அரவணைத்துச் செல்வது அவசியம். சில பிரச்சினைகள் உருவாகலாம்.

**துலாம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் பேசும்போது பொறுமை அவசியம். காரியம் தாமதம் ஏற்படக்கூடும்.

**விருச்சிகம்:** உறவுகளால் நன்மை ஏற்படும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டு. குடும்பத்தில் உங்கள் ஆலோசனைக்கு மிகுந்த முக்கியத்துவம் கிடைக்கும்.

**தனுசு:** உற்சாகமான நாள். மனஉறுதியுடன் செயற்படுவீர்கள். தந்தைவழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகும். சகோதரர்கள் உங்களுடைய யோசனையை ஏற்றுக்கொள்வார்கள்.

**மகரம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். செலவு செய்யவேண்டி வரும். சிலருக்கு உறவினர்களால் சில சங்கடங்கள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவும் இருக்காது.

**கும்பம்:** தெய்வ அனுகூலம் நிறைந்த நாள். பிள்ளைகளால் வீட்டில் உற்சாகமும் கலகலப்புமான சூழ்நிலை காணப்படும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.

**மீனம்:** எதிலும் நிதானமாகச் செயற்படவும். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. சிலருக்கு தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். வீண்விவாதம் ஏற்படக்கூடும்.



யாழ்ப்பாணம் - அராலி ஆவரம்பிட்டி முத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிய நிலையில், நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை 3ஆம் திருவிழா அடியவர்கள் சூழ பக்திபூர்வமாக நடைபெற்றது. (ச)

படங்கள்: ஐ.சிவசாந்தன்

# போதைப்பொருள்களுடன் வயோதிபப் பெண் கைது!



கொழும்பு, மே 30

உயிர்கொல்லி ஹெரோய்ன் உட்பட ஐஸ், கேரளக் கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருள்களை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் வயோதிபப் பெண்ணொருவர் கொழும்பு, கிராண்ட்பாஸில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அத்துரிகிரிய பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்த தகவலுக்கமைய சந்தேகநபர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டார். சந்தேகநபரிடமிருந்து 50 கிராம் 610 மில்லிகிராம் ஹெரோய்ன், 101 கிராம் 100 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள், 3 கிலோ கேரளக்கஞ்சா மற்றும் 900 போதைமாத்திரைகள் என்பன கைப்பற்றப்பட்டன.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரான 67 வயதுடைய வயோதிபப் பெண், கிராண்ட்பாஸ் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டதையடுத்து கிராண்ட்பாஸ் பொலிஸார் சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-இ)



# ஆக்கக் கண்காட்சி

யாழ்ப்பாணம், மே 30

மானிப்பாய் சத்தியசாயி பாடசாலையின் இடைநிலைப் பிரிவு மாணவர்களின் ஆக்கக் கண்காட்சி பாடசாலை மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

கண்காட்சிக்கு பிரதம விருந்தினராக வலிகாமம் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி யமுனா இராஜசீலன் பங்கேற்றார். கண்காட்சியில் விஞ்ஞானம், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம், செயன்முறைத்தொழினுட்பத் திறன்கள் ஆகிய பாடவிதானங்களின் கீழ் மாணவர்கள் ஆக்கங்களை காட்சிப்படுத்தினர். (ச)



'சேவ் ஏ லைப்' நிறுவனத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை இரத்தவங்கிப் பிரிவின் அனுசரணையில் குருதிக் கொடைமுகாமொன்று கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்திலுள்ள 'சேவ் ஏ லைப்' நிறுவனத்தின் அலுவலகத்தில் நடைபெற்றது. (ச-66)

# அலைபேசி திருட்டு; மூவருக்கு மறியல்!

யாழ்ப்பாணம், மே 30

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் பெறுமதியான அலைபேசிகளை அபகரித்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

சுன்னாகம், கோப்பாய், யாழ்ப்பாணம் பகுதிகளில் அண்மைக்காலமாக அலைபேசிகள் களவாடப்பட்ட சம்பவம் தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளுக்கமைய சந்தேகநபர்கள் மூவர் கைதுசெய்யப்பட்டனர்.

அவர்களிடமிருந்து மீட்கப்பட்ட 3 லட்சம் ரூபா பெறுமதியான அலைபேசி உள்ளிட்ட சான்றுப்பொருள்களுடன் சந்தேகநபர்களை நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் பொலிஸார் முற்படுத்தினர். வழக்கை விசாரித்த நீதிவான் ஏ.ஆனந்தராஜா, சந்தேகநபர்களை எதிர்வரும் 8ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ச-23)

# கசிப்புடன் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், மே 30

புங்குடுதீவு 4ஆம் வட்டாரத்தில் ஆயிரத்து 500 மில்லிலீற்றர் கசிப்புடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என ஊர்காவற்றுறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு வழங்கப்பட்ட இரகசியத் தகவலுக்கமைய சந்தேகநபர் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கைதுசெய்யப்பட்டார். சந்தேகநபரை சட்டநடவடிக்கைக்கு உட்படுத்த ஊர்காவற்றுறைப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## காயமடைந்தவனுக்கே வலி தெரியும்!

**போ**ரால் உயிரிழந்தவர்களுக்கு பொதுவான நினைவுத்தூபி அமைக்கும் அரசாங்கத்தின் திட்டத்தை ஆதரித்துள்ள நாடாளுமன்ற உறுப்பினரும் வடமாகாண முன்னாள் முதலமைச்சருமான க.வி.விக்னேஸ்வரன், இந்தப் பொதுத்தூபி 'தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள நல்லதொரு மாற்றம்' என்றவாறாகவும் கருத்துத் தெரிவித்திருக்கின்றார். உயிரிழந்தவர்களுக்கான பொதுத்தூபித் திட்டத்தை, தமிழ்த் தேசியக் கட்சிகள் ஓரணியில் நின்று வலுவாக எதிர்த்து வரும் நிலையில், இந்த நிலைப்பாட்டிலிருந்து நேரெதிர் பயணப்பாதையைக் கொண்டதாக அமைந்திருக்கின்றது விக்னேஸ்வரனின் கருத்து.

இறுதிப்போரின்போது படுகொலை செய்யப்பட்டவர்களுக்கும், அங்கு நிகழ்ந்த போர்க்குற்றங்களுக்கும் நீதியென்பது இன்னமும் எட்டாக்கனியாகவே இருந்து வருகின்றது. போரால் பல்லாயிரம் உறவுகளைப் பறிகொடுத்த தமிழர்களின் காயங்களை ஆற்றுப்படுத்துவதற்கு காத்திரமான நடவடிக்கையொன்றை கொழும்பு மேற்கொண்டதாக இல்லை. மாறாக சர்வதேசத்தையும் தமிழர்களையும் தொடர்ந்தும் ஏமாற்றும் கைங்கரியத்தைத்தான் அரசாங்கம் முழுமுனைப்பில் மேற்கொண்டு வருகின்றது. போர்க்குற்றவாளிகள் என்று சர்வதேசத்தால் அடையாளப்படுத்தப்பட்டவர்களுக்கு அரசாங்கத்தால் தண்டனைக்குப் பதிலாக பதவியுயர்வுகளே வழங்கப்பட்டுவரும் நிலையில், பொதுவான நினைவுத்தூபி என்ற திட்டம் எவ்வாறு நடைமுறைச் சாத்தியம் என்ற சிந்தனையை க.வி.விக்னேஸ்வரன் தன்னுள் ஏற்படுத்திக் கொள்ளாதமை துரதிர்ஷ்டமே.

போரால் இறந்தவர்களுக்கும் கொல்லப்பட்டவர்களுக்கும் பொதுவான நினைவுத்தூபிகள் அமைக்கப்படுவது வழமையானதுதான். தென்னாபிரிக்கா உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் இந்த பொது நினைவுத்தூபிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால், அந்த நினைவுத்தூபிகள் போர்க்குற்றங்களுக்கும் போர்க்குற்றங்களால் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்தவர்களின் காயங்களுக்கும் உரிய ஆற்றுப்படுத்தலை மேற்கொண்ட பின்னர்தான் அமைக்கப்பட்டன. காயங்கள் தீர்க்கப்பட்ட பின்னர்தான், போரால் ஏற்பட்ட பாதிப்புக்களை பொதுவான கண்ணோட்டத்தின் கீழ் அணுகுவதற்கான மனப்பக்குவம் எழும், அதுவே யதார்த்தம். அதை விடுத்து, நீதியென்பது இன்னமும் தொலைதூரத்தில் இருக்கின்ற நிலையில், பொதுவான நினைவுத்தூபி அமைத்து இறந்தவர்களை அஞ்சலிப்போம் என்பது கொழும்பின் உச்சபட்சமானதும், கடைகெட்டதுமான அரசியலே அன்றி வேறில்லை.

இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்களுக்கு நீதியை வழங்கவேண்டும் என்பதும், நிலைமாறுகால நீதியை நிலைநாட்டவேண்டும் என்பதும் கொழும்புக்கு ஐ.நா. முன்வைத்துள்ள முக்கியமான வலியுறுத்தல்களாக இருக்கின்றன. இவ்வாறான நிலையில், ஜனாதிபதி ரணிலின் எண்ணக்கருவின் கீழ் உதிக்கும் இந்த பொது நினைவுத்தூபியானது, நிலைமாறுகால நீதியையும், போரால் பாதிக்கப்பட்டவர்களின் காயங்களுக்கான மருந்திடல்களையும் அரசாங்கம் வழங்க முனைவதன் வெளிப்பாடே என்ற கற்பிதம் மேற்கொள்ளப்படலாம். அது, இலங்கை அரசாங்கத்தின் மீதான சர்வதேசத்தின் நிலைப்பாட்டை – அழுத்தத்தை மாற்றியமைக்கவும் வழிவகுக்கலாம். எனவே, மிகமிகக் கவனமாகவும் நுட்பமாகவும் இந்த விடயம் அணுகப்படவேண்டும்.

பொதுத்தூபிக்கு விக்னேஸ்வரன் வெளிப்படுத்தியுள்ள இணக்கமும் விருப்பமும் அவருடைய தனிப்பட்ட கருத்தல்ல. அவர் தமிழ் மக்களின் பிரதிநிதிகளில் ஒருவர். தமிழர்கள் தம் அரசியல் விருப்பங்களை – எண்ணங்களை – அபிலாஷைகளை வெளிப்படுத்த விக்னேஸ்வரனுக்கும் அதிகாரமளித்துள்ளனர். விக்னேஸ்வரன் பிரதம நீதியரசராகப் பதவி வகித்த ஒருவர். அவரது கருத்து சர்வதேச சமூகத்தால் உன்னிப்பாக அவதானிக்கப்படும். ஆதலால், ஒரு கருத்தை வெளிப்படுத்த முன்னர் அதன் தாற்பரியத்தை – ஆழத்தை – அந்தக் கருத்து எவ்வாறு அர்த்தப்படுத்தப்பட வாய்ப்புள்ளது என்ற போக்கை சிந்தித்து – ஆராய்ந்து வெளிப்படுத்த வேண்டியது விக்னேஸ்வரனின் பிரதான கடமையும் பொறுப்புமாக இருக்கின்றது. விக்னேஸ்வரன் அரசியல் அனுபவமற்றவர். அத்துடன், போரால் பாதிக்கப்பட்ட மக்களின் வலிகளை அறியாதவர் என்ற பொதுவான கருத்தை – விமர்சனத்தை மெய்ப்பிக்கும் வகையில் இனியாவது அவர் செயற்படாதிருக்கட்டும்.

### நாளொரு நல்வார்த்தை

“ ஒழுக்கம் போர்க்களம் போன்றது. நாம் ஒழுக்கத்தோடு வாழவேண்டுமானால், ஓயாமல் மனதோடு போராட வேண்டும்

– ஜீன் ஜாக்ஸ் ரூஸோ




# ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேசத்தைக் காப்பாற்றிய தந்தை

## ஐ.தே.க. பொதுச்செயலர் பாராட்டு



**வவுனியா, மே 30**

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை தேசத்தைக் காப்பாற்றிய தந்தையாக ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.**

வவுனியா. மில் வீதியில் ஐக்கிய தேசியக் கட்சியின் மாவட்ட அலுவலகத்தை நேற்றுமுன்தினம் திறந்து வைத்த பின்னர் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாடு வங்குரோத்து நிலையை அடைந்தபோது. பிரச்சினைகளைச் சவாலாக ஏற்று அதனைத் தீர்க்க முன் வந்தவர் தான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. டி.எஸ்.சேனநாயக்கவை தேசத்தின் பிதா என்றால் ரணில் விக்கிரமசிங்கவை தேசத்தைக் காப்பாற்றிய தந்தையாக ஏற்றுக் கொள்ளவேண்டும். அவர் தற்போது இந்த நாட்டில் அனைத்து மக்களும் இன, மத, பேதங்கள் இன்றி ஒரு தாய் மக்களாக வாழ வேண்டும் என்று அரசியல் பேச்சுக்களை முன்னெடுத்துள்ளார். இந்த நாட்டில் தமிழ். சிங்கள, முஸ்லிம். பௌத்த. இந்து. இஸ்லாம், கிறிஸ்தவம் என்ற பேதங்கள் இல்லாது எல்லோரும் ஒரு குடையின்கீழ் வந்து நாட்டை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்று திட்டமிட்டுச் செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்,

2048ஆம் ஆண்டு முழுமையாக அபிவிருத்தி அடைந்த நாடாக இந்த நாட்டை மாற்ற அவர் செயற்பட்டுக் கொண்டிருக்கிறார். சிலர் அதை விமர்சிக்கிறார்கள். ஆனால் அவர் திட்டமிட்டுச் செயலாற்றுகிறார். எல்லாச் சமூகங்களும் மேம்படவேண்டும். அதற்கு எல்லாச் சமூகங்களுக்குள்ளும் உள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட வேண்டும் - என்றார்.

(ம-110)

# இன்னும் சில தினங்களில் அமைச்சரவையில் மாற்றம்

கொழும்பு, மே 30

இன்னும் சில தினங்களில் இரு அமைச்சரவை அமைச்சர் பதவிகளில் மாற்றம் இடம் பெறவுள்ளதாக அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

ஜப்பானுக்கான பயணத்தை முடித்துக் கொண்டு ஜனாதிபதி தற்போது நாடு திரும்பியுள்ள நிலையிலேயே அவர் அமைச்சரவை மாற்றத்தை மேற்கொள்ளவுள்ளார் என்று தெரியவருகின்றது. பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினர்கள் இருவர் அமைச்சுப் பதவிகளுக்காகக் காத்துள்ளனர் என்றும் அவர்களுக்கு அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட வாய்ப்புள்ளன என்றும் மேலும் தெரிய வருகின்றது.

(ம-இ)

நாளை

31.05.2023
புதன்கிழமை
வைகாசி 17

சுபநேரம் : 04.22- 05.52
ராகுகாலம் : 11.52 – 01.22

ஏகாதசி விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூளையில் 'சிப்' பொருத்தி நரம்பியல் நோய்களுக்கு தொழில்நுட்பத்தில் தீர்வு!

## ஆய்வுக்கு அமெரிக்கா அனுமதி

உலக பணக்காரரான எலான் மஸ்க்கின் நிறுவனங்களின் ஒன்றான நியூராலிங்க் நிறுவனம், மனித மூளையில் 'சிப்' பொருத்தி கணினியுடன் இணைத்து, நரம்பியல் தொடர்பான நோய்களுக்கு தொழில்நுட்பம் மூலம் மருத்துவ உதவிகளை வழங்க ஆய்வு நடத்தி வருகிறது.

மனித மூளையில் மைக்ரோ சிப்பை பொருத்தி சோதிக்கும் இந்த ஆய்வுக்கு அமெரிக்க அரசு தற்போது அனுமதி வழங்கியுள்ளது.

பக்கவாதம், நரம்பு பிரச்சினை, கண்பார்வைக் குறைபாடு உள்ளவர்களுக்கு மூளையில் அமைக்கும் சிப்பை கொண்டு அவர்களை இயக்குவதுதான் இந்த மைக்ரோ சிப் ஆராய்ச்சியின் முக்கியமான நோக்கம் எனச் சொல்லப்படுகிறது.

முதற்கட்டமாக குரங்குகளின் மூளையில் 'சிப்'பை பொருத்தி நடத்தப்பட்ட பரிசோதனை வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

இதுதொடர்பான ஆய்வறிக்கை அமெரிக்க உணவு மற்றும் மருந்துகள் நிர்வாகத்திடம் நியூராலிங்க் நிறுவனம் சமர்ப்பித்து அடுத்த கட்டமாக மனிதர்களிடம் ஆய்வு மேற்கொள்ள அனுமதி கோரியது. இந்தநிலையில் இந்த ஆய்வுக்கு அமெரிக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது. (ச-இ)

# துருக்கியே அதிபராக மீண்டும் எர்டோகன்



**அங்காரா, மே 30**

**துருக்கியேயை 20 ஆண்டுகள் ஆட்சி செய்த எர்டோகன் நாடாளுமன்றத் தேர்தலில் மீண்டும் வெற்றி பெற்று ஆட்சியைக் கைப்பற்றியுள்ளார்.**

துருக்கியேயில் 2003 ஆம் ஆண்டு முதல் பிரதமராக இருந்த எர்டோகன், 2014 ஆம் ஆண்டு அந்தப் பதவியை கலைத்து ஜனாதிபதியாக பதவியேற்றார்.

20 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த துருக்கியே தற்போது இல்லை. துருக்கியே அரசியல் ரீதியாக பல்வேறு மாறுதல்களைக் கொண்டிருக்கிறது. துருக்கியேயின் ஒட்டுமொத்த ஆதரவு நிலைப்பாட்டை எர்டோகன் இழந்துவிட்டார். சர்வாதிகாரிபோல் செயற்படுகிறார் என அவர் மீது பல்வேறு குற்றச்சாட்டுக்களை எதிர்க்கட்சிகள் விமர்சித்தனர். இந்தநிலையில் அவற்றையெல்லாம் முறியடித்து மீண்டும் வெற்றிபெற்று அதிபராக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார் எர்டோகன்.

எர்டோகனின் வெற்றியை அவரது ஆதரவாளர்கள், தலைநகர் அங்காரா உள்ளிட்ட பகுதிகளில் கொண்டாடி வருகின்றனர். (ச-இ)

# திறமையற்ற பிள்ளைக்கு சொத்தில் பங்கு இல்லை

## எலான் மஸ்க் அதிரடி

வொஷிங்டன், மே 30

வாரிசு என்ற அடிப்படையில் மட்டும் எனது சொத்துக்களை பிள்ளைகளுக்கு வழங்கப்போவது கிடையாது. என்னுடைய தொழில் மேல் விருப்பமில்லாத பிள்ளைகளுக்கு நிறுவனத்தை ஒப்படைப்பதைவிட நிர்வகிக்கத் தெரிந்த வேறு தகுதியானவர்களிடம் ஒப்படைப்பேன் என்று எலான் மஸ்க் கூறியுள்ளார்.

ஆங்கில செய்தி நிறுவனத்துக்கு அண்மையில் அளித்த நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

உலகப் பணக்காரர்களின் வரிசையில் எலான் மஸ்க், மிகச்சாதாரண குடும்பத்தில் பிறந்து தற்போது செவ்வாய்க் கிரகத்துக்கு மனிதனை அனுப்புவது உள்ளிட்ட வியத்தகு சாதனைகளைப் படைத்து உயர்ந்துள்ளார்.

30 ஆண்டுகளில் உலகையே ஆளும் தொழில்நுட்ப நிறுவனங்களை உருவாக்கியுள்ளார்.

**எலான் மஸ்க்கின் தற்போதைய சொத்து மதிப்பு 170 பில்லியன் அமெரிக்க டொலர்களாகும்.**

**எலான் மஸ்க்குக்கு 9 பிள்ளைகள் இருக்கின்றனர். அதில் முதல் மகனுக்கு 19 வயதாகிறது. கடைசி மகனுக்கு 3 வயதாகிறது. இந்த நிலையில், வாரிசு என்ற அடிப்படையில் மட்டும் எனது பங்குகளை பிள்ளைகளுக்கு வழங்கப்போவது கிடையாது. எனது பிள்ளைகளுக்கு என்னுடைய சொத்துக்களையும், நிறுவனங்களை யும் நிர்வகிப்பதற்கான திறமை, தகுதி, ஆர்வம் இல்லாவிட்டால், அவர்களுக்கு எனது பங்குகளை வழங்கும் முடிவை நான் நிச்சயமாக எடுக்கமாட்டேன்- என்றுள்ளார்.**

(ச-இ)


## கேள்வி அறிவித்தல்
## சபை நிதி வேலைத்திட்டம் - 2023
## வெங்கலச்செட்டிகுளம் பிரதேசசபை

01. தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, வெங்கலச்செட்டிகுளம் பிரதேசசபை, வவுனியா தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காக கோருகின்றார்.

02. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.

03. கேள்வி பெற தகுதியுடையவராவதற்கு வெற்றிபெறும் கேள்விதாரர் அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் நெடுஞ்சாலை அமைப்பிற்கான சீடா (CIDA) பதிவுள்ளவராகவும், கறுப்புப் பட்டியலில் (Black List) பெயர் இடம்பெறாதவராகவும் இருத்தல் வேண்டும்.

04. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் செயலாளர், வெங்கலச்செட்டிகுளம் பிரதேசசபை, செட்டிகுளம் (தொலைபேசி 024-2260914/024-2260055, தொலைநகல் 024-2260913, மின்னஞ்சல்-techvckps@gmail.com/cheddips@gmail.com) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் 30/05/2023 ஆம் திகதியிலிருந்து வேலைநாட்களில் மு.ப 9.00 மணி முதல் பி.ப 3.00 மணி வரை கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.

05. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக **தகவல்கள் தரவு அட்டவணை (Schedule)** பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் **செயலாளர், வெங்கலச்செட்டிகுளம் பிரதேசசபை,மன்னார் வீதி, செட்டிகுளம்** எனும் இடத்திலிருந்து 30/05/2023 ஆம் திகதியிலிருந்து 13/06/2023 ஆம் திகதி வரை மு.ப 9.00 மணிக்கும் பி.ப 3.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா. 2,000/= (VAT நீங்கலாக) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

07. கேள்வியினை இரு பிரதிகளில் தயாரித்து **செயலாளர், வெங்கலச்செட்டிகுளம் பிரதேசசபை,மன்னார் வீதி, செட்டிகுளம்** எனும் முகவரிக்கு 14/06/2023 ஆம் திகதி பி.ப 02.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். அல்லது அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியினுள் இட வேண்டும். கேள்வி மனுப்பத்திரத்துடன் சீடா (CIDA) புத்தகத்தின் ஒப்பந்தகாரரின் விபரம் மற்றும் நிறைவேற்றப்பட்ட ஒப்பந்த வேலைகளின் விபரம் அடங்கிய பக்கங்களின் பிரதி இணைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, 14.06.2023ம் திகதி பி.ப 02.00 வருகைதரும் கேள்விதாரர் அல்லது எழுத்து மூலமாக அனுமதிக்கப்பட்ட கேள்விதாரரின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். கேள்விகளை முழுமையாக அல்லது பகுதியளவில் மாற்றம் செய்வதற்கோ அல்லது நிராகரிப்பதற்கோ கேள்விச்சபைக்கு முழுமையான அதிகாரம் உண்டு.

08. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித்திகதியிலிருந்து 77 நாட்கள் வரையும் (30/08/2023) செல்லுபடியாகும்.

09. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| தொ. இல. | கேள்வி எண் | வேலை விபரங்கள் | மதிப்பீட்டு தொகை (ரூபா மில்) | ஒப்பந்த காலம் | வேண்டப் படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணை வைப்பு (ரூபா) | செல்லுபடியாகும் காலம் |
| 01 | NP/14/43(6)/ 5/3- 1(01) /2023-04 | 1) பூசணிப்பிட்டி பாடசாலை வீதி (முகத்தான்குளம் 9ம் ஒழுங்கை) -கிரவலிடல், 2)ஜெயநகர் பிரதான வீதி - கிரவலிடல் 3)சூடுவெந்தபுலவு உள்ளக வீதி 9ம் ஒழுங்கை - கிரவலிட்டல் 4)வீரபுரம் 2ம் ஒழுங்கை- கிரவலிடல் 5),மெனிக்பாம் ஞானப்பிள்ளையார் கோவில் அருகாமை வீதி-கிரவலிடல், 6)கரம்பைமடு முதலியார்குளம் வீதி கல்லிட்டு தாரிடல், 7)மாங்குளம், உள்ளக வீதி வீதி கல்லிட்டு தாரிட்ல் | 6.46 | 91 நாட்கள் | C6,C7and C8 வீதி | 65,000.00 | 27/09/2023 |

10. கேள்விகோரல் பற்றிய முன்கூட்டிய கூட்டம் 06/06/2023 மு.ப 10.30 க்கு வெங்கலச்செட்டிகுளம் பிரதேசசபையில் நடைபெறும். இக்கலந்துரையாடலில் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கலந்து கொள்ளலாம்.


**தலைவர்,**
**உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு,**
**வெங்கலச்செட்டிகுளம் பிரதேசசபை.**

**30.05.2023**

(cr 39908) (N-1)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவிழா நாயகனை வாழ்த்துகின்றோம்




எமது பாடசாலையின் **விவசாய பாட ஆசிரியராக**
அரும்பெரும் பணியாற்றி இன்று **(30.05.2023)** செவ்வாய்க்கிழமை
ஓய்வுபெற்றுச் செல்லும்

**திரு. சி. இராஜகுலசிங்கம்**
**(Special Trained Agriculture)**

அவர்களது ஓய்வுக்காலம் சிறப்பாக அமைய அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

**சேவை விபரம்**

- 1988 - 1993 - யா/ இயற்றாலை அமெரிக்கமிஷன் தமிழ் கலவன் பாடசாலை
- 1993 - 1995 - யா/ சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயம்
- 1995 - 1997 - யா/ சாவகச்சேரி டிறிபேக்கல்லூரி
- 1997 - 2000 - யா/ எழுதுமட்டுவாழ் தமிழ்க் கலவன் பாடசாலை
- 2000 - 2011 - யா/ சாவகச்சேரி இந்துக்கல்லூரி
- 2011 - 2012 - யா/ கொடிகாமம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை
- 2012 - 2017 - யா/ மீசாலை விக்கினேஸ்வரா வித்தியாலயம்
- 2017 - 2023 - யா/ சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயம்

வாழ்த்துவோர்: ஆசிரியர் நலன்புரிச் சங்கம்

**யா/சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயம்.**

(cs.50584) (N-1)



## பெண் இலிகிதர் தேவை

யாழ். பரியோவான் கல்லூரிக்கு அண்மையில் இயங்கும் சட்ட அலுவலகத்திற்கு பெண் இலிகிதர் தேவை.

**076 363 5700**



## திருவாசகம் முதியோர் இல்லம்

உங்கள் அன்பார்ந்த தாய், தந்தையரை உங்களால் பாதுகாக்க முடியாமல் இருக்கிறதா? நாங்கள் பாதுகாப்பு தருகிறோம். உங்கள் தாய், தந்தை சந்தோஷமாக இருக்க நாங்கள் எங்களை அர்ப்பணிக்கின்றோம். கவலை வேண்டாம். எங்களுடன் கை கோருங்கள் நாங்கள் பாதுகாப்புத் தருகின்றோம்.

**இல.87,89, செட்டித்தெரு, நல்லூர்.**
**077 528 5213,**
**+4474 9589 0204**

(CS 50593) AH-1


## கண்ணீர் அஞ்சலி

எமது கல்வியியற்கல்லூரியின் விரிவுரையாளர்
**திரு. சின்னத்தம்பி குகன் அவர்களின்**
மாமனார்

**திரு. பொன்னம்பலம் இரத்தினசபாபதி**
**(ஓய்வுபெற்ற கூட்டுறவுப் பரிசோதகர்)**

அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
அன்னாரின் மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி!!!

**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிச் சமூகம்.**



பிறப்பு:- 25.11.1935
இறப்பு:- 27.05.2023

(CS/50617)AH-1

# புளுட்டோவின் மேற்பரப்பில் இதய வடிவில் பனிப்பாறை

9ஆவது பெரிய கோளான புளுட்டோ கோளின் மேற்பரப்பில் இதயம் போன்ற வடிவிலான பனிப்பாறைகள் இருப்பது கண்டறியப்பட்டுள்ளன.

அமெரிக்காவின் நாசா விண்வெளி மையம் வானில் விண்கலங்களை அனுப்பி பல்வேறு ஆய்வுகளைச் செய்து வருகிறது.

இந்த விண்கலங்கள் எடுக்கும் வியப்பூட்டும் அரிய வகை புகைப்படங்களை நாஸா தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் வெளியிட்டு வருகிறது.

அந்தவயையில் தற்போது சூரியனைச் சுற்றி வரும் 9 ஆவது பெரிய கோளான புளுட்டோ கோள் மேற்பரப்பில் இதயம் போன்ற வடிவிலான பனிப்பாறைகள் இருப்பது கண்டறியப்பட்ட புகைப்படத்தை நாஸா பகிர்ந்துள்ளது. இதில் மலைகள், பாறைகள், பள்ளத்தாக்கு, பள்ளாங்கள் மற்றும் சமவெளி பகுதிகள் அமைந்து இருப்பது போன்று உள்ளது. (ச-இ)

# 12 வயதில் 5 பட்டங்களை பெற்ற சிறுவன்

வொஷிங்டன், மே 30

அமெரிக்காவின் புல்லர்டன் கல்லூரியில் கற்கும் சிறுவன் தனது 12 வயதில் 5 பட்டங்களைப் பெற்று மிகவும் இளம் வயது பட்டதாரியாகச் சாதனை படைத்துள்ளான்.

அமெரிக்காவைச் சேர்ந்த க்ளோவிஸ் ஹங் என்ற சிறுவனே இந்தச் சாதனையை புரிந்துள்ளான். க்ளோவிஸ் ஹங், வரலாறு, சமூகஅறிவியல், சமூகநடத்தை மற்றும் சுயவளர்ச்சி, கலை மற்றும் மனித வெளிப்பாடு மற்றும் அறிவியல் மற்றும் கணிதம் ஆகிய ஐந்து துறைகளிலேயே பட்டம் பெற்றுள்ளார்.

அடுத்த ஆண்டு மேலுமொரு பட்டப்படிப்பை முடிக்க அவன் திட்டமிட்டுள்ளான் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## கேள்வி அறிவித்தல்
## சபைநிதி - 2023
## துணுக்காய் பிரதேசசபை, துணுக்காய்

01. இலங்கை சனநாயக சோசலிச குடியரசினது மாகாண சபை நிதியின் ஒரு பகுதி கீழ் காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட திட்டங்களிற்கு பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02. தலைவர், பெறுகைக்குழு **துணுக்காய் பிரதேசசபை, முல்லைத்தீவு,** அவர்களினால் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட கட்டுமான வேலைகளுக்காக கோருகின்றார்.

03. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 4/2016(1) இலக்க 16.03.2016ம் திகதிய நிதிச்சுற்றறிக்கைக்கு அமைவாக வடக்கு மாகாணத்தை சார்ந்தவர்களுக்கும் மற்றும் வேண்டப்படும் உரியதரத்தை கொண்டிருப்போருக்கும் முன்னுரிமையளிக்கப்படும்.

04. கேள்வி பெறத்குதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி (வீதி) பொருத்தமானதரத்தில் ICTAD/CIDA பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

05. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **தலைவர், பெறுகைக் குழு, துணுக்காய் பிரதேச சபை, துணுக்காய் (தொலைபேசி இல:-021 228 4532/ 021 228 4926 E-mail:psthunukkai@gmail.com** இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09.00 மணி முதல் மாலை 14.00 மணிவரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.

07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் **தலைவர், பெறுகைக்குழு துணுக்காய் பிரதேச சபை, துணுக்காய்** எனும் இடத்திலிருந்து 30.05.2023 ம் திகதியிலிருந்து 12.06.2023 **ம் திகதி** வரை காலை 09.00 மணிக்கும் மாலை 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.**2000** செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத் தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

08. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து **தலைவர் பெறுகைக்குழு துணுக்காய் பிரதேச சபை, துணுக்காய்** எனும் முகவரிக்கு 13.06.2023 ம் திகதி மாலை 14.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்படவேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர்/கேள்விதாரரின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

09. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| ஒப்பந்த இலக்கம் | வேலைவிபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியனில்) | ஒப்பந்த காலம் | வேண்டப் படும் தரம் | கேள்வி பிணை வைப்பு (ருபா | கேள்வி செல்லுபடியாகும் காலம் | கேள்வி பிணை செல்லுபடியாகும் காலம் |
|---|---|---|---|---|---|---|---|
| NP/14/44(05)/02/ Council(01)/ 2023 | Improvements (Mettaling and Tarring) of Mallavi 2nd Lane | 1.739Mn (வரிநீங்கலாக) | 02 மாதங்கள் | C9 and C8 (வீதி) | 17,000.00 | 01.08.2023 | 29.08.2023 |
| NP/14/44(05)/02/ Council(02)/2023 | Construction of Iyankankulam village 3rd, 6th road Culvert and Renovation(Gravelling) of Iyankankulam 2nd internal road | 1.369Mn (வரிநீங்கலாக) | 1 ½ மாதங்கள் | C9 and C8 (வீதி) | 14,000.00 | 01.08.2023 | 29.08.2023 |
| NP/14/44(05)/02/ Council(03)/2023 | Improvements (Mettaling and Tarring) of Pugalenthinagar 1st Lane | 2.434Mn (வரிநீங்கலாக) | 02 மாதங்கள் | C9,C8 and C7 (வீதி) | 24,000.00 | 15.08.2023 | 12.09.2023 |
| NP/14/44(05)/02/ Council(04)/2023 | Renovation (Gravelling) of Paddupochchi 1st road | 2.021Mn (வரிநீங்கலாக) | 01 மாதங்கள் | C9,C8 and C7 (வீதி) | 20,000.00 | 15.08.2023 | 12.09.2023 |

10. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை முழுமையாக அல்லது பகுதியாக நிராகரிக்கவோ, மீள்கேள்வி கோரவோ பெறுகைக் குழுத் தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு.

**தலைவர்.**
**பெறுகைக்குழு, துணுக்காய் பிரதேச சபை,**
**முல்லைத்தீவு வடமாகாணம்**

(CR/39929)AH-1

**30.05.2023**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேச்சுத்திறன் காண் நிகழ்வு

யாழ்ப்பாணம், மே 30

யாழ்ப்பாணம் ஞானக்குழந்தை இல்லங்களின் வருடாந்த பேச்சுத் திறன் காணும் வைபவம் ராஜா கிறீம் ஹவுஸ் மண்டபத்தில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

பாலர் கல்விக் கழகத் தலைவர் லயன் எஸ்.பி.காசிநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக வவுனியா கல்வி வலய முன்னாள் திட்டமிடல் உதவியாளர் இ.தர்மகுலசிங்கம் கலந்து கொள்ளவுள்ளார். (ஓ)



# விளையாட்டுத் திருவிழா

மன்னார் நலன்புரி சங்கம் அமைப்பினரால் பிரித்தானியாவில் மாபெரும் விளையாட்டுத் திருவிழா கடந்த 8ஆம் திகதி திங்கட்கிழமை இடம்பெற்றது.


இந்த நிகழ்வின்போது விளையாட்டுக்களில் மாகாண மற்றும் தேசிய மட்டங்களில் பங்குபற்றியிருந்த மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த புலம்பெயர் தேசத்தில் வசிக்கும் வீர வீராங்கனைகள் கௌரவிப்பும் இடம்பெற்றது.

அத்துடன் தற்போது மன்னார் மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தி இலங்கை தேசிய கால்பந்தாட்ட அணியில் இடம்பெற்றிருக்கும் மன்னார் மாவட்டத்தின் இரண்டு வீரர்களும் ஐக்கிய ராஜ்யத்துக்கு அழைக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(ய-213)

# மரண அறிவித்தல்

தோற்றம்
08 - 04 - 1984



மறைவு
14 - 05 - 2023

## குலசிங்கம் கிருபாகரன்

அனிஞ்சியன் குளம் மல்லாவியை பிறப்பிடமாகவும் நிரந்தர வசிப்பிடமாகவும் தற்போது கனடாவில் வசித்து வந்த குலசிங்கம் கிருபாகரன் (கிருபா கராஜ் உரிமையாளர், மல்லாவி) அவர்கள் கடந்த (14.05.2023) ஞாயிற்றுக்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற குலசிங்கம் கமலாதேவி (கோப்பாய் ரீச்சர்) அவர்களின் பாசமிகு மகனும், தனுசா (இலங்கை வங்கி மல்லாவி) அவர்களின் அண்ணனும், தனுஜா (ஆசிரியர், மு/ விநாயகபுரம் தமிழ் வித்தியாலயம்) அவர்களின் அன்புக் கணவரும், நிரோஜன் (ஆசிரியர், மு/மல்லாவி மத்திய கல்லூரி) அவர்களின் மைத்துனரும்,திருநாவுக்கரசு ஜெயமணி தம்பதிகளின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.05.2023) செவ்வாய்க் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் கனடாவில் 8911 WOODBINE AVE, MARKHAM , ONL3R5G1 அமைந்துள்ள Funeral Home கனடாவில் நடைபெறுவதுடன் இன்று (30.05.2023) இரவு 8.30 மணியளவில் இல.60, சந்தை வீதி, செபஸ்தியார் ஆலயம் அருகாமை அனிஞ்சியன் குளம் மல்லாவியில் தாயாரின் இல்லத்தில் நினைவஞ்சலி நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

0773713936
0770802160


தகவல்
குடும்பத்தினர்.

ஓம் விநாயகர் பெருமானே நமஹ!

# மரண அறிவித்தல்

## நடராசா கதிரவேலு (தம்பு)

(ஓய்வுபெற்ற தபால் தரம் பிரிப்பாளர் யாழ். தபாலகம்)



யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை, காரைக்காட்டு ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் வண்ணார்பண்ணை, முருகமூர்த்தி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா கதிரவேலு (தம்பு) கடந்த (27.05.2023) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா அன்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சாம்பசிவம் ஸ்தபதி பத்மாவதி தம்பதியினரின் மருமகனும், காலஞ்சென்ற இராஜேஸ்வரியின் பாசமிகு கணவரும், நாகபாலா (சுவிஸ்), சிவபாலா (பிரான்ஸ்), சுதர்ஜனா ஆகியோரின் பாசமிகு தந்தையும், சரோஜினி (சுவிஸ்), கல்யாணி (பிரான்ஸ்), மகாதேவன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ஹம்சிகா (ஆசிரியர், கிளி/இயக்கச்சி அ.த.க பாடசாலை), ஷானுகா (சுவிஸ்), நிவேதன் (சுவிஸ்), நிவேதா (சுவிஸ்), ரிஷியந்தன் (பிரான்ஸ்), குணால் (பிரான்ஸ்), சேசனா (பிரான்ஸ்), ஆகியோரின் பேரனும், காலஞ்சென்றவர்களான இராசலட்சுமி, ஆனந்தராசா, மகாலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான நடராசா, மனோன்மணி, பாலரட்ணம் மற்றும் இராஜேந்திரன் (வவுனியா), காலஞ்சென்றவர்களான மாதவன், கமலா, திலகவதி ஆகியோரின் மைத்துனரும், வேலம்மா, தர்மேஸ்வரி, சந்திரசேகரம், பாக்கியராசா ஆகியோரின் உடன்பிறவா சகோதரரும், மகாதேவி, காலஞ்சென்ற நற்குணராசா ஆகியோரின் சிறிய தந்தையும், வரதராசா, காலஞ்சென்ற கோவிந்தராஜா மற்றும் தருமரெத்தினம், அருமைரட்ணம், கீதாலட்சுமி, பிரபாலட்சுமி, லதாலட்சுமி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.05.2023) புதன்கிழமை முற்பகல் 10.00மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மண்ணில் 25.04.1940
விண்ணில் 27.05.2023

79, காரைக்காட்டு ஒழுங்கை,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்

க.நாகபாலா (மகன் - 0041 7945 04132)
க.சிவபாலா (மகன் - 0033 6527 63096)
ப.மகாதேவன் (மருமகன் - 077 610 5132)

(cs.50594) (N-1)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "அகவை அறுபது காணும்"

சிதம்பரப்பிள்ளை தங்கம்மா அவர்களின் மகன்

## திரு. சி. இராஜகுலசிங்கம் - ஆசிரியர்

அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்




மாணவச் செல்வங்களின் அறிவுக் கண்ணைத் திறந்து அழகாக அவர்களை உருவாக்கும் பணி ஆசிரியப்பணி. அதன் வழி நின்று அறிவு புகட்டி அன்புக்கு இலக்கணமாகும். ஆசிரியப் பணியை நீண்டகாலம் பல பாடசாலைகளில் பணிபுரிந்து தற்போது **30.05.2023** இல் ஓய்வுபெறும் எமது சகோதரர். மைத்துனர் அவர்கள் ஓய்வுபெற்றாலும் இன்னும் நீண்ட காலம் ஆரோக்கியமாக இன்னும் பல பொது சேவைகளையும். கல்விச் சேவைகளையும் ஆற்றவேண்டும். பல்லாண்டு காலம் நோய் நொடியின்றி நீண்ட ஆயுளையும் பெற்று வாழ்க என்று மனதார பாராட்டி வாழ்த்துகின்றோம்.


"வாழ்க பல்லாண்டு நீழ்க உம் தொண்டு"

**சேவை விபரம்**

| | | |
|---|---|---|
| 1. | யா/ இயற்றாலை அ.மி.த.க. பாடசாலை | - 17.08.1988 - 05.02.1991 |
| 2. | யா/ சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி. | - 01.01.1993 - 01.05.1994 |
| 3. | யா/ டிறிபேக் கல்லூரி | - 02.05.1994 - 10.06.1997 |
| 4. | யா/ எழுதுமட்டுவாழ் அ.த.க. பாடசாலை | - 11.06.1997 - 05.10.2000 |
| 5. | யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி | - 06.10.2000 - 04.06.2004 |
| 6. | யா/ கொடிகாமம் அ.த.க.பாடசாலை | - 06.06.2011 - 20.03.2012 |
| 7. | யா/ மீசாலை விக்னேஸ்வரா மகாவித்தியாயலம் | - 21.03.2012 - 03.01.2017 |
| 8. | யா/ சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி. | - 04.01.2017 - 30.05.2023 |

வாழ்த்துவோர் : **பாஸ்கரன், யோகமலர் மற்றும் மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள், சகோதரிகள், மைத்துனர், மைத்துனிமார், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பெறாமக்கள்.**

# மரண அறிவித்தல்



## திரு. செல்லையா குணரத்தினம்

**(முன்னாள் முகாமையாளர் Star Garments)**

'அன்னை இல்லம்' சங்கத்தானை சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் சொய்சாபுர இரத்மலானையினை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.செல்லையா குணரத்தினம் (முன்னாள் முகாமையாளர் Star Garments) கடந்த 24.05.2023 புதன்கிழமை இறைபதம் அடைந்துவிட்டடார்.

அன்னார். காலஞ்சென்றவர்களான செல்லையா இராசம்மா அவர்களின் அன்பு மகனும். காலஞ்சென்ற பீற்றர் லூயூசி அவர்களின் அன்பு மருமகனும். மேரியின் அன்புக்கணவரும். பிரதீபா (கனடா). அனுசா. தினேஸ் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும். நிக்கலஸ். அசங்க. அசானி ஆகியோரின் அன்பு மாமனாரும். நேத்மா. பிரவிந்து. சியான். றியோன். ஷனலி . ஐவா. தியா ஆகியோரின் ஆசைப்பேரனும். சபாரத்தினம் (முன்னாள் பிரதி அதிபர் சாவகச்சேரி இந்துக்கல்லூரி). நடராசா (முன்னாள் சேவைக்கால ஆலோசகர் ஆங்கிலம்). நல்லநாதன் (முன்னாள் கணக்காளர் கல்வித்திணைக்களம்). திருநாவுக்கரசு (கணக்காளர் - அவுஸ்திரேலியா). சிவராசா (முன்னாள் பிரதிப்பணிப்பாளர் நாயகம் SLBC) ஆகியோரின் பாசமிகு சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சொய்சாபுரத்திலுள்ள அன்னாரது இல்லத்தில் கடந்த 28.05.2023 அன்று நடைபெற்றது. இவ் அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CR 39932) A-1

**தகவல்: குடும்பத்தினர்.**

# மூன்றாம் ஆண்டு நினைவு



பிறப்பு
12.10.1944

இறப்பு
30.05.2020

(கல்லடி - கன்னாதிட்டி வீதி, தருமபுரம்)

## அமரர் நடராஜா சுரேந்திரன்

(ஆங்கில மொழிபெயர்ப்பாளர்)

கண்ணீர் பிரளயத்தில் தவிக்கவிட்டு
மூன்று ஆண்டுகள் சென்றுவிட்டன
வேர் அறுந்த விருட்சமாய்
விழுது இழந்து தவிக்கின்றோம்
காலன் உங்களில் பாசம் வைத்து
அழைத்து விட்டான் - நாங்களோ
எது செய்வது என்று தெரியாமல் தவிக்கின்றோம்.

என்றும் உங்களின் நினைவுகளுடன் வாழும்
குடும்பத்தினர்

| | | |
|---|---|---|
| சு. புஸ்பராணி | - (மனைவி | - 076 663 5996) |
| சு.விவேகரமணன் | - (பிரான்ஸ் | - 0033 624 039 679) |
| சு.வித்தியாரமணன் | - (UK | - 0044 749 518 6321) |
| கி.விஜயகாயத்திரி | - (கனடா | - 001 613 612 3121 |

# மரண அறிவித்தல்

மண்ணில்
07 . 12 . 1938

விண்ணில்
28 . 05 . 2023



## அமரர் செபஸ்தியாம்பிள்ளை திருச்செல்வம்

யாழ்ப்பாணம். ஆனைக்கோட்டையை பிறப்பிடமாக கொண்டவரும். மாபாகே, றாகம (கொழும்பு) வசிப்பிடமாகக் கொண்டவருமான அமரர் செபஸ்தியாம்பிள்ளை திருச்செல்வம் அவர்கள் கடந்த (28.05.2023) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செபஸ்தியாம்பிள்ளை ஆரோக்கியம் தம்பதிகளின் அன்பு மகனும், யோகமலரின் அன்புக் கணவரும், அருளானந்தம் அவர்களின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான ஜோசேப் ஞானம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும். அஞ்சலா, வத்சலா, பென்லற், ஹம்லற் ஆகியோரின் அன்புத் தந்தையும். வில்வராஜா, அலெக்ஸ், சுகந்தி, நிஷா ஆகியோரின் அன்பு மாமனாரும், தனுஜா. சஞ்சுதன், கனுசியா, நியூலின், மேனன், விகாஷன், அக்சனா, அகன்ஷா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (30.05.2023) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிமுதல் மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு. மாலை 04.00 மணிக்கு வத்தளை அன்னமாள் ஆலயத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு. இரங்கல் வழிபாட்டுடன் அன்னம்மாள் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவரது ஆன்ம சாந்திக்காக அனைவரும் இறைவனை
பிரார்த்திக்கின்றோம்...!

**தகவல்:**

**பென்லற் (மகன்) :- 0777 100 874**
**அலெக்ஸ் (மருமகன்) :- 077 530 8315**

(CR 39931) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தேசிய அரசியலுக்கு தகுதியற்றவர் விக்னேஸ்வரன்

## சுகாஷ் கடும் தாக்கு

**யாழ்ப்பாணம், மே 30**

**தமிழ்த் தேசியத்தை மையப்படுத்திய அரசியலில் ஈடுபடுவதற்கு விக்னேஸ்வரன் தகுதியற்றவர் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளரும் சட்டத்தரணியுமான க.சுகாஷ் தெரிவித்தார்.**

போரில் கொல்லப்பட்டவர்களுக்குப் பொதுத் தூபி அமைக்கும் அரசாங்கத்தின் திட்டத்துக்கு விக்கினேஸ்வரன் ஆதரவு வழங்கியதையடுத்தே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது: இனப்படுகொலை செய்த இராணுவத்துக்கும் விடுதலைக்காகப் போராடிய தமிழ் மக்களுக்கும் ஒரே இடத்தில் அஞ்சலி என்பதை ஏற்க உங்களால் எவ்வாறு முடிந்தது விக்கினேஸ்வரன் ஐயா அவர்களே? சில வருடங்களுக்கு முன்னர் உங்களை உங்கள் கட்சியே முதலமைச்சர் பதவியிலிருந்து அகற்றி, அரசியலிலிருந்து அப்புறப்படுத்த முற்பட்டபோது, கட்சி பேதங்களைக் கடந்து உங்களுக்காக வீதிக்கு இறங்கியதையிட்டு வெட்கப்படுகின்றேன், வேதனைப்படுகின்றேன். நீங்கள், இனி ஒரு நிமிடம் கூட தமிழ்த் தேசிய அரசியலில் நீடிக்கத் தகுதியற்றவர் - என்றார்.

(ம)

# டொலர் பெறுமதி மேலும் சரிவு

கொழும்பு, மே 30

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி மேலும் வலுவடைந்துள்ளது. இலங்கை மத்திய வங்கி நேற்று வெளியிட்டுள்ள நாணய மாற்று அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. டொலரின் கொள்வனவு விலை 289.89 ரூபாவாகவும், விற்பனை விலை 303.26 ரூபாவாகவும் நேற்றுப் பதிவாகியுள்ளது. (அ-ஒ,இ)

# காணி மோசடி: நொத்தாரிசு கைது

யாழ்ப்பாணம், மே 30

காணியை மோசடியாக விற்பனை செய்வதற்காக, போலியான கையெழுத்திட்டு உறுதி தயாரித்த குற்றச்சாட்டில் புத்தூரைச் சேர்ந்த நொத்தாரிசு ஒருவர் யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் விசாந்த தலைமையிலான விசேட குற்ற விசாரணைப் பிரிவால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

2019 ஆம் ஆண்டு கொடிகாமம் இத்தாவில் பகுதியில் போலியான கையெழுத்திட்டு உறுதி தயாரித்த குற்றச்சாட்டிலேயே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

காணியை மோசடியாக விற்பனை செய்தவர்களும் விரைவில் கைது செய்யப்படவுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (அ-ஒ,26)


**வேலையாட்கள் தேவை**

ஊரெழுவில் அமைந்துள்ள பிரபல உணவகத்திற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.

* கொத்து, பிரைட்றைஸ் போடத் தெரிந்தவர்.
* உதவியாளர்கள் (ஆண்/ பெண்)

074 230 1234
075 230 1104


## இலங்கைக் கடவுச்சீட்டு

# புலம்பெயர் இலங்கையர்களும் 'ஒன்லைனில்' விண்ணப்பிக்க முடியும்

கொழும்பு, மே 30

வெளிநாட்டில் உள்ள இலங்கையர்கள் புதிய கடவுச்சீட்டுக்கு விண்ணப்பிக்கும்போதும், கடவுச்சீட்டைப் புதுப்பிக்கும்போதும் எதிர்வரும் முதலாம் திகதி முதல் ஒன்லைன் மூலம் விண்ணப்பிக்க முடியும் என சர்வதேச உறவுகள் குறித்த துறைசார் மேற்பார்வைக் குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள் அந்தந்த நாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களுக்குச் செல்லாமல் ஒன்லைன் மூலம் கடவுச்சீட்டுக்கு விண்ணப்பிக்க முடியும்.

(அ-ஒ,இ)


**கண்ணீர் அஞ்சலி**

எமது கல்லூரியின் முன்னாள் அதிபர் திருமதி ஆனந்தஈஸ்வரி இராசரத்தினம் அவர்களின் பாசமிகு புதல்வன்



**இராசரத்தினம் அபிதாஸ்**

அவர்கள் அகால மரணமடைந்த செய்தியறிந்து மனவேதனையடைகின்றோம். அவரின் திடீர் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சேவையாளர் சங்கம்,
யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி.

(CR 39933) A-1


# கதிர்காம பாதயாத்திரையில் முதியவர் திடீர் உயிரிழப்பு

*யாழ்ப்பாணம், மே 30*

கதிர்காமத்துக்கு செல்வச்சந்நிதியிலிருந்து பாதயாத்திரையாகப் புறப்பட்டு மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலயத்தைச் சென்றடைந்த யாத்திரிகர் நேற்று திங்கட்கிழமை உயிரிழந்துள்ளதாக மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதடி மத்திய வீதியைச் சேர்ந்த இராசையா சிவலிங்கம் (வயது - 74) என்பவரே உயிரிழந்துள்ளார்.

கடந்த 6ஆம் திகதி கதிர்காமத்துக்கான பாதயாத்திரை சந்நிதிமுருகன் ஆலயத்திலிருந்து ஆரம்பமானது. பாதயாத்திரைக் குழு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலயத்தைச் சென்றடைந்தது. பாதயாத்திரிகள் ஆலய வளாகத்தில் தங்கியிருந்துள்ளனர்.

இந்த நிலையில் நேற்றுக் காலையில் குறித்த நபர் பணிஸ் சாப்பிட்ட பின்னர் அமர்ந்திருந்த நிலையில் திடீரென நிலத்தில் சரிந்து வீழ்ந்ததையடுத்து உயிரிழந்துள்ளார்.

இதனையடுத்து சடலமானது உடற்கூற்றுப் பரிசோதனைக்காக மட்டக்களப்பு மாவட்ட மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஏனைய யாத்திரிகர்கள் தொடர்ந்து பயணிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

(அ-ஒ,131)

## வீட்டுத்திட்டத்தெரிவு

# மக்கள் பார்வைக்கு

சாவகச்சேரி, மே 30

தென்மராட்சிப் பிரதேசத்தில் மீள்குடியேற்ற அமைச்சால் முன்னெடுக்கப்படும் வீட்டுத்திட்டத்துக்குத் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளின் பெயர்ப்பட்டியல் பிரதேச செயலகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

தென்மராட்சிப் பிரதேசத்தில் பத்து லட்சம் ரூபா பெறுமதியான வீடமைப்புத் திட்டத்துக்கு 42 பயனாளிகளும் ஆறு லட்சம் ரூபா பெறுமதியான வீடமைப்புத் திட்டத்துக்கு 20 பயனாளிகளும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளின் பெயர்ப்பட்டியல் மக்கள் பார்வைக்காக பிரதேச செயலகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. பயனாளர்கள் தெரிவில் ஆட்சேபனைகள் இருப்பின் எதிர்வரும் 2ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலகத்தில் எழுத்துமூலம் சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(ச-9)


**மரண அறிவித்தல்**



**ரஞ்சிதம் செல்லபாக்கியம்**

மட்டுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ரஞ்சிதம் செல்லபாக்கியம் நேற்று (29.05.2023) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், நல்லையா ரஞ்சிதத்தின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான நல்லையா இராசாத்தி தம்பதியரின் அன்பு மருமகளும், செல்லத்தம்பி, செல்லாச்சி, செல்வம், செல்வராசா, செல்வராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், செல்லி, சின்னத்துரை, சின்னத்தம்பி, மகேஸ்வரி, கணபதிப்பிள்ளை ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், செல்வமணி, மகேந்திரம் (இத்தாலி), கருணாவதி, கலாநிதி, ரவிந்திரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், கணேசலிங்கம், இந்துமதி (இத்தாலி), வனந்தராசா, குணசௌந்தரதாஸ் (பவுணர்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், கவிதா, விஜிதா, றஜிதா (மலேசியா), ஜெனிதா, நிருஷா, ஸ்ரெப்னி, ஸ்ரெபானா, பிறிந்தா, சஜீதன், துசாந், அபிசன், நிதுசியா, தருண், தாருண்யன், லிதுசன், தர்மிகன் (சுவிஸ்), அனுஸ்காந் (சுவிஸ்), கவீனா (சுவிஸ்), தர்சனா, தனுசனா, சாதுரியன், சஞ்சீவ், சுஜின்ஸ்கன், சுவின்சிகா, அஸ்வி, சாறா, கஜானி, பவித்திரா, சரணி, டிசானா, யஸ்வினி, கான்சிகா (மலேசியா), கோகில்சன் (மலேசியா) ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (30.05.2023) செவ்வாய்க்கிழமை மு.ப 11.00 மணியளவில் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

T:P - 077 057 2598, 077 584 2911

(CR 39930) A-1


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வீதி விபத்துக்களால்...

வடக்கு மாகாணத்தில் வீதி விபத்துக்களில் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்து வருகின்றது. இந்த மாதத்தில் அது அதிகம் என்று பொலிஸ் தரப்புக்கள் தெரிவிக்கின்றன.

வீதி ஒழுங்குகளைப் பேணாமல் செல்வது, அதிகரித்த வேகத்தில் பயணிப்பது மற்றும் தலைக்கவசம் முறையாக அணியாமல் பயணிப்பது என அதிகரிக்கும் வீதி விபத்துக்கான காரணங்களை பொலிஸார் பட்டியலிடுகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் 10 பேரும், கிளிநொச்சியில் 3 பேரும், மன்னார், முல்லைத்தீவு, வவுனியாவில் தலா ஒவ்வொருவருமாக 16 பேர் இந்த மாதத்தில் முதல் 29 நாள்களிலும் உயிரிழந்துள்ளனர். (அ-ஒ.5)

## வீதியைக்...

தெல்லிப்பழை கிளானையைச் சேர்ந்த சடையன் பாலச்சந்திரன் (வயது - 48) என்பவரே உயிரிழந்துள்ளார்.

மல்லாகத்திலிருந்து தெல்லிப்பழையை நோக்கி துவிச்சக்கரவண்டியில் சென்றுகொண்டிருந்தவர், துர்க்கை அம்மன் ஆலயத்துக்கு எதிரில் உள்ள பேருந்து தரிப்பிடத்தில் நின்றிருந்தவரை சந்திப்பதற்காக வீதியைக் கடக்க முற்பட்டுள்ளார்.

வீதியின் மத்திய கோட்டுப் பகுதியில் வைத்து தெல்லிப்பழையிலிருந்து யாழ். நகர் நோக்கி வந்த வாகனம் மோதியதில் படுகாயமடைந்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர் மருத்துவமனையிலேயே நேற்றுமுன்தினம் மாலை உயிரிழந்துள்ளார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார். (அ-ஒ.26)

## மாணவர்களின்...

தமது வசதிக்காக அன்றி மாணவர்களின் வசதி மற்றும் நலன் கருதிச் செயற்படவேண்டும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.

குறைந்தது 75 மாணவர்களாவது பரீட்சைக்குத் தோற்றத் தகுதி பெற்றிருந்தால், அந்தப் பாடசாலையை பரீட்சை நிலையமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கல்வி அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கிய ஜனாதிபதி, ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ள பரீட்சை நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படாத வகையில் ஏதேனும் வசதிகளை வழங்க முடியுமாயின், அதற்காக அடுத்த சில நாள்களில், நடவடிக்கை எடுக்குமாறும் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

கல்வி அமைச்சின் செயலர், பரீட்சைகள் ஆணையாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளுடன் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி ரணில் இந்த அறிவுறுத்தல்களை வழங்கினார்.

நேற்று ஆரம்பமான க.பொ.த. சாதாரண தரப்பரீட்சையில் இம்முறை பல பாடசாலைகளின் மாணவர்கள் தாம் கல்வி கற்கும் பாடசாலைக்குப் பதிலாக, வேறு பாடசாலையில் அமைக்கப்பட்டுள்ள பரீட்சை நிலையத்துக்கு அனுப்பி வைக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுத்ததால் மாணவர்கள் சிரமங்களை எதிர்கொள்வதாகபெற்றோரும்மாணவர்களும் ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் ஆராய்ந்ததில் தற்போது நிலவும் பொருளாதார நிலைமையை கருத்திற்கொண்டு பரீட்சை நிலையங்களை மட்டுப்படுத்த கல்வி அமைச்சும் பரீட்சைத் திணைக்களமும் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது, மாணவர்களின் மன நிலையை நேரடியாகப் பாதிக்கும் என்பதால், இத்தகைய வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னர் குறைந்தது ஒரு வருடமாவது உரிய பாடசாலைகளுக்கும் மாணவர்களுக்கும் அறிவித்த பின்னரே இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி வலியுறுத்தினார்.

ஆயினும், மாணவர்களின் கல்விக்காக நடத்தப்படும் அனைத்துப் பரீட்சைகளையும் தாமதமின்றி நடத்துவதற்கு முறையான வேலைத்திட்டம் அவசியமானது எனவும், அவை நடத்தப்படாமைக்கான காரணங்களைக் கூறிக்கொண்டிருப்பது பரீட்சைத் திணைக்களத்தின் பணியல்ல எனவும் குறிப்பிட்ட ஜனாதிபதி, மாணவர்கள் பழகிய சூழலில் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான பின்னணியை உருவாக்குவது கல்வி அமைச்சு மற்றும் பரீட்சை திணைக்களத்தின் முக்கியமான பொறுப்பு என்று தெரிவித்தார். (அ-ஒ.இ)

## வாக்காளர்...

அலுவலரைத் தொடர்புகொள்ள வேண்டும் என்றும் தேர்தல் ஆணையம் கேட்டுக்கொண்டுள்ளது.

தேர்தல் ஆணைக்குழுவின் இந்த அறிவிப்பை உதாசீனம் செய்யாது வாக்காளர்கள் அனைவரும் இந்தக் ஆண்டுக் கணக்கெடுப்பில் தங்கள் பெயர் பதிவு செய்யப்படுவத்தை உறுதிசெய்துகொள்ள வேண்டும் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாகத் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் பொதுச்செயலர் மகேசன் கஜேந்திரன் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்திருக்கும் அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில், வாக்காளர் கணக்கெடுப்பில் ஒரு தடவை பெயர்களைப் பதிவுசெய்தால் போதுமானது எனக்கருதிப் பலர் தொடர்கணக்கெடுப்புக் குறித்து அக்கறை செலுத்துவதில்லை. இதனால், புதிய தேருநர் இடாப்பில் அவர்களது பெயர் நீக்கப்பட்டு விடுகிறது. இதைக் கருத்திற்கொண்டு கிராம அலுவலர்கள் தற்போது மேற்கொண்டுவரும் 2023 ஆம் ஆண்டுக்கான கணக்கெடுப்பில் வாக்காளர்கள் ஒவ்வொருவரும் தங்கள் பெயர் இடம்பெறுவதை உறுதிசெய்வது அவசியமாகும்.

இலங்கையில் வாக்காளர் தினம் கொண்டாடப்பட்டுவரும் ஜூன் 1 ஆம் திகதியன்று 18 வயது பூர்த்தியடைந்த இலங்கைக் குடிமகனாகவுள்ள எவரும் வாக்களிக்கும் உரிமை பெற்றவர்களாகக் கருதப்படுவார்கள். வாக்காளர்களாகத் தகுதி பெற்றுள்ள புதியவர்களும் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தேருநர் இடாப்பில் தங்கள் பெயர்களைப் பதிவு செய்துகொள்ளவேண்டும். இதன் மூலம் மாத்திரமே வாக்களிக்கும் உரிமை உறுதி செய்யப்படும்.

ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள வாக்காளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும். வாக்காளர்களின் எண்ணிக்கை குறைந்து செல்லுதல் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆசனங்களில் மாத்திரம் குறைவை ஏற்படுத்தும் ஒன்றல்ல. மாவட்டத்தின் அபிவிருத்திக்கு ஒதுக்கப்படும் நிதி, மாவட்டத்திலிருந்து பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகும் மாணவர்களின் எண்ணிக்கை போன்றவற்றிலும் குறைவை ஏற்படுத்தும். அந்த வகையில், வாக்களிக்கத் தகுதி பெற்ற அனைவரும் தங்களை வாக்காளராகப் பதிவு செய்தல் ஒரு தேசியக் கடமையாகும். எனவே, வாக்காளர்கள் அனைவரும் தாமதமின்றித் தமது கிராம அலுவலருடன் தொடர்பு கொண்டு இந்த ஆண்டுக்கான வாக்காளர் கணக்கெடுப்பில் தங்கள் பெயர் இடம்பெறுவதைத் தவறாது உறுதிசெய்துகொள்ள வேண்டும் - என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-ஒ.இ)

## கொழும்பைச்...

யாழ்ப்பாண பொலிஸாருக்கு நேற்றுக் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில், அந்த விடுதியில் திடீர்ச் சோதனை முன்னெடுக்கப்பட்டு அங்கு தங்கியிருந்த 2 பெண்கள் மற்றும் விடுதியின் முகாமையாளர் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விடுதியில் சமூகச் சீரழிவு இடம்பெறுவதாக அந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் யாழ்ப்பாண பொலிஸ் நிலையக் குற்றத்தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரிக்கு முறைப்பாடு செய்துள்ளனர். இதனையடுத்து பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸ் குழு திடீர்ச் சோதனையை நேற்று நடத்தியது. பதிவுகள் எதுவுமில்லாது விடுதியின் இரண்டு அறைகளில் தங்கியிருந்த கொழும்பைச் சேர்ந்த 2 பெண்களையும், விடுதியின் முகாமையாளரையும் பொலிஸார் விசாரணைக்காக கைது செய்து பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர். விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் அவர்களை முற்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை - இந்த விடுதியின் சமூகச் சீரழிவுகள் தொடர்பில் இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு மக்கள் தகவல் வழங்கியதாகவும் அவர்கள் நடவடிக்கை எடுக்காததைத் தொடர்ந்தே பொலிஸாரிடம் முறையிடப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. (அ-ஒ.20,125)

## மத நல்லிணக்கத்தை...

இதனால் மத நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் தரப்பினரை தயவுதாட்சணியம் பாராமல் கைது செய்வதற்காக விசேட பொலிஸ் பிரிவை அமைப்பதற்கு தீர்மானித்துள்ளனர்.

புலனாய்வுப் பிரிவுகளால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் வழங்கப்பட்ட விசேட அறிக்கையில் மத நல்லிணக்கத்தை சீர்குலைப்பதற்கான திட்டமிட்ட நடவடிக்கை ஒரு குழுவால் முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்தே விசேட பொலிஸ் பிரிவை அமைப்பதற்கான நடவடிக்கையை ஜனாதிபதி ரணில் முன்னெடுத்துள்ளார்.

புதிய பொலிஸ் பிரிவை உருவாக்குவதற்கான நடவடிக்கை எடுக்குமாறு பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சருக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

நாட்டில் பல பகுதிகளிலும் இவ்வாறான குழுக்கள் உருவாகியுள்ளன எனவும், அரசை தர்மசங்கடத்துக்குள்ளாக்கும் வகையிலேயே திட்டமிட்ட அடிப்படையில் அக்குழுக்களின் செயற்பாடுகள் அமைந்துள்ளன எனவும் விசேட அறிக்கையில் புலனாய்வுப் பிரிவு குறிப்பிட்டுள்ளது. (அ-ஒ.44)

## ஒருங்கிணைப்புக்...

செயலகத்தில் நாளை இடம்பெறவுள்ள ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஆராயப்படும் என்று யாழ். மாவட்டச்செயலர் அ.சிவபாலசுந்தரன் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் இந்த மாதத்தில் மாத்திரம் 10 பேர் உயிரிழந்துள்ளனர். யாழ். நகரப் பகுதியில் நேற்று மதியம் இடம்பெற்ற விபத்தில் இளம் குடும்பத் தலைவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார். மிக ஒடுக்கமான வீதியின் இரு மருங்கிலும் வாகனங்கள் நிறுத்தி வைத்திருந்தமை மற்றும் நெருக்கடியான நேரத்தில் கனரக வாகனங்களை அந்த வீதியின் ஊடாகப் பயணிக்க அனுமதித்தமை போன்ற காரணங்களாலேயே இந்த உயிரிழப்பு ஏற்பட்டதாக சமூகவலைத்தளங்களில் பலரும் பதிவிட்டுள்ளனர்.

இதேவேளை யாழ். நகரில் வீதி நெரிசல் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில் மிக ஒடுக்கமான வீதிகளிலும் சன நெரிசல் அதிகமான வீதிகளிலும் பகல் நேரங்களில் கனரக வாகனங்களின் போக்குவரத்துக்கு அனுமதிப்பது மற்றும் கடைகளுக்கு முன்பாக வாகனங்களை நிறுத்தஅனுமதிப்பதுதொடர்பில்பரிசீலனை செய்யவேண்டும் என்றும் சமூகவலைத்தளப் பதிவுகளில் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த விடயங்கள் தொடர்பில் யாழ். மாவட்டச் செயலரை தொடர்புகொண்டு கேட்டபோதே, வீதி விபத்துக்கள் தொடர்பில் நாளை புதன்கிழமை நடைபெறும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஆராயப்படும் என்று குறிப்பிட்டார். கடந்த 4ஆம் திகதி நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் வீதி விபத்துக்கள் தொடர்பில் ஆராயப்பட்டிருந்தாலும் உறுதியான தீர்மானம் எதுவும் எட்டப்பட்டிருக்கவில்லை. இந்த நிலையிலேயே நாளை மீளவும் அது தொடர்பில் ஆராய்ந்து தீர்மானம் எடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ.5)

## நேர்முகத்தேர்வுக்கு...

மோட்டார் சைக்கிளில் பயணித்த இளம் குடும்பத்தலைவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

மந்துவில் கிழக்கு கொடிகாமத்தைச் சேர்ந்த இராசரத்தினம் அபிதாஸ் (வயது - 29) என்பவரே உயிரிழந்தார்.

'வீதியில் வெள்ளைக்கோட்டுப் பகுதியில் பயணித்துக்கொண்டிருந்த அபிதாஸை பின்னால் வந்த லொறி முந்திச் செல்ல முற்பட்டபோது விபத்து ஏற்பட்டுள்ளது. லொறி, மோட்டார் சைக்கிளில் பயணித்த அபிதாஸை தட்டி வீழ்த்தியது. லொறிச் சில்லு அவர் மீது ஏறியதால் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்' என்று தமது விசாரணைகளில் தெரியவந்துள்ளதாகப் பொலிஸார் குறிப்பிட்டனர். லொறிச் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். (அ-ஒ.20,26)

## 'பட்டா'...

உயிரிழந்தார். இந்தச் சம்பவம் நேற்று திங்கட்கிழமை மாலை இடம்பெற்றது. தருமபுரத்தைச் சேர்ந்தவரும், 4 பிள்ளைகளின் தந்தையுமான தியாகராசா சஞ்சீவன் (வயது - 36) என்பவரே உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சியிலிருந்து தருமபுரம் நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிளும், புதுக்குடியிருப்பிலிருந்து கிளிநொச்சி நோக்கி பயணித்த பட்டா வாகனமும் வெலிக்கண்டல் பகுதியில் நேருக்கு நேர் மோதின. இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் படுகாயம் அடைந்த நிலையில் கிளிநொச்சி மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டனர். அதில் தியாகராசா சஞ்சீவன் உயிரிழந்துள்ளார். விபத்துத் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-ஒ.113)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சந்திரமுகி – 2 படப்பிடிப்பு நிறைவு

சந்திரமுகி படத்தின் முதற்பாகத்தின் வெற்றியைத்தொடர்ந்து17 வருடங்கள்கழித்து 'சந்திரமுகி 2' திரைப்படம் பிரமாண்டமாக உருவாகி வருகின்றது. பி.வாசு இயக்கத்தில் உருவாகிவரும் இந்தப் படத்தில் ராகவா லாரன்ஸ் கதாநாயகனாக நடித்து வருகிறார். கங்கனா ரனாவத் பிரதான கதாபாத்திரத்தில் நடிக்கிறார். மேலும் வடிவேலு உள்ளிட்ட பல திரைப்பிரபலங்கள் இதில் நடிக்கின்றனர். இந்த நிலையில் 'சந்திரமுகி 2' படத்தின் படப்பிடிப்பு முடிவடைந்துள்ளதாக படக்குழு அறிவித்துள்ளது. (ச-இ)


### வேலையாட்கள் தேவை

யாழ். கோண்டாவிலில் இயங்கும் புடைவை விற்பனை நிலையமொன்றிற்கு பெண் வேலையாட்கள் தேவை.

**077 9574 580, 076 3545 120**

### Room வாடகைக்கு

யாழ். மருதனார்மடம் சந்திக்கு அருகாமையில் Room வாடகைக்கு உண்டு. (பெண்களுக்கு மட்டும்).

**077 9574 580**

### வீடு வாடகைக்கு

பலாலி வீதி திருநெல்வேலிச் சந்தியில் 4 அறைகள் கொண்ட வாகன தரிப்பிட வசதி உடைய 25ஆம் இலக்க வீடு வாடகைக்குண்டு.

தொடர்புகொள்ளவேண்டி நேரம் மாலை 6.00 மணிக்கு பின்.

**077 592 7373**

### வேலையாள்கள் தேவை

கட்டட நிர்மாண நிறுவனம் ஒன்றிற்கு காங்கேசன்துறையில் (K.K.S) வேலைசெய்வதற்கு மேசன், கூலி Painter (பெயின்ரர்) தொழிலாளர்கள் தேவை.

**077 239 7211, 077 899 7115**

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் புத்தூரில் 12 பரப்புக் காணி விற்பனைக்கு.

* பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியிலிருந்து மட்டுவில் செல்லும் வீதியில்.
* புத்தூர் பிரதான தண்ணீர் தாங்கி அருகாமையில்.
* இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில். 18 அடி பாதையுடன்.
* ஒரு பரப்பின் விலை 120,000/= மட்டும்.

**தொடர்பு: 076 733 6047, 076 7558 606**

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் இளவாலையில் 30 பரப்பு **(நிலப்பரப்பு)** காணி விற்பனைக்கு.

* இளவாலையிலிருந்து மாதகல் செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்.
* 18 அடி பாதையுடன் இரண்டு பரப்பாகவும் மூன்று பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்.
* நல்ல சூழல், நன்னீர் ஊற்று நிலம், குடியிருப்புகள் சூழ உள்ள காணி.
* இளவாலை சந்தியில் இருந்து 1 KM தூரம்.
* திருமண மண்டபங்கள், வியாபார நிலையங்கள், சுற்றுலா விடுதிகள், வீடுகள் அமைக்க உகந்த இடம்.
* ஒரு பரப்பின் விலை : எட்டு லட்சம் ரூபாய் (800,000/=)

**தொடர்பு: 076 911 9371, 076 165 3129**


### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையில் 10 பரப்புக் காணி விற்பனைக்கு

* 16 அடி பாதையுடன் இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.
* வட்டுக்கோட்டை மாவடி சந்தியிலிருந்து மூளாய் செல்லும் பிரதான வீதியில் இருந்து 200 m தூரத்தில். (உபவில் வீதி, பிரதான காபற் வீதி முகப்புடன்)
* யாழ்ப்பாணம் காரைநகர் செல்லும் 786 வழி இலக்க தனியார் அரச பேரூந்துகள் செல்லும் வீதியில் இருந்து 200 m தூரம்.
* குடியிருப்புகள் சூழ உள்ள காணி.
* நன்னீர் ஊற்று நிலம்
* மாவடி சந்தியிலிருந்து 800 m தூரத்தில்.

**தொடர்பு: 076 7390 413, 076 733 6093**


## கண்ணீர் அஞ்சலி



மானிப்பாய் பிரதேச வைத்தியசாலை நோயாளர் நலன் புரிச்சங்கத்தின் ஆரம்ப கால உறுப்பினரும், பொருளாளருமாக நீண்ட காலம் பதவிவகித்த

### நமசிவாயம் அன்புராஜா

அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு ஆறாத்துயரடைகின்றோம் வைத்தியசாலை இதே இடத்தில் அமைவதற்கு அரும்பாடுபட்டவர்களில் இவர் முக்கியபங்கு வகித்தார். தொடர்ந்து வைத்தியசாலையின் அபிவிருத்தியிலும் நோயாளர் நலனிலும் பொது நலனிலும் அக்கறை கொண்டுழைத்த ஒரு பெரு மகனாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தாருக்கும் உறவினர், நண்பர்களுக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நோயாளர் நலன் புரிச்சங்கம்
மானிப்பாய் பிரதேச வைத்தியசாலை, ஆனைக்கோட்டை

## முதலாம் ஆண்டு நினைவு நாள் அழைப்பு



கடந்த (10.06.2022) வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்த எங்கள் அன்புத் தெய்வம்

### அமரர் வைத்திலிங்கம் சிவானந்தன்

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு தினம் இன்று (30.05.2023) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற உள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

டச்சுவீதி, மானிப்பாய்,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### திரு. ந.அன்புராஜா

(முன்னாள் நவாலி Y.M.C.A காரியதரிசி)

நவாலி கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு.ந. அன்புராஜா (முன்னாள் நவாலி Y.M.C.A காரியதரிசி) நேற்று (29.05.2023) திங்கட்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் ஞானதேவியின் அன்புக் கணவரும், நிமலன், அமலன், அகிலன் ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயசாந்தி, பிருந்தா ஆகியோரின் அன்பு மாமனாரும், நிலக்ஷன், எரிக் அக்கிஷன், எரிக்கா அபித்தா, அக்ஷயன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (30.05.2023) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று நவாலி C.A.C.M சேமக்காலையில் நல்லடக்கம் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நவாலி கிழக்கு,
மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS/50600)AH-1

**077 362 3740**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 30.05.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.